


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 33 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 06 ஆம் திகதி வியாழக்கிழமை (21.11.2024)




# ஜனாதிபதியின் கொள்கை உரையை உற்றுநோக்கும் இராஜதந்திரிகள்




**சுப்ரமணியம் நிஷாந்தன்**

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், முதல் செயற்பாடாக சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு இடம்பெற உள்ளது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் சபாநாயகர் முன்னிலையில் இடம்பெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணத்தை தொடர்ந்து, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்காக நாடாளுமன்றம் 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11.30 மணிக்கு கூடும்.

முதல் முறையாக நாடாளுமன றத்துக்கு வரும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சம்பிரதாயபூர்வமான வரவேற்பை சபாநாயகர் அளிப்பார் என்பதுடன், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் வரவேற்புடன் நாடாளுமன்ற சபை வளாகத்தின் சபாபீடத்துக்கு ஜனாதிபதி அழைத்து செல்லப்படுவார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி 02 →

## வன்னிக்கு மேலும் ஒரு ஆசனம்: 09 ஆக அதிகரித்த பிரதிநிதித்துவம்!

**கி.வசந்தன்**

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்க்கு ஒரு ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது என்பவருக்கே குறித்த தேசியபட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

விபரம் 5 ஆம் பக்கம்

## ஹரினுக்கு பிணை



தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

பதுளை நீதவான் நீதிமன்றில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து தலா 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் அவரது ஆதரவாளர்கள் பதுளையில், 10ஆம் இலக்கம் அச்சிடப்பட்ட சட்டைகளை அணிந்து பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஹரின் பெர்னாண் டோவின் 02 →

## அரிசி தட்டுப்பாட்டை போக்க 70 மெற்றிக் தொன் இறக்குமதி

### முதல் அமைச்சரவையில் பகீர் தீர்மானம்

**சுப்ரமணியம் நிஷாந்தன்**

சந்தையில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க 70ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இந்த அரிசியை இறக்குமதி செய்து உற்சவக்காலத்தில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரிசி மாஃபியா க்களுக்கு முற்றுப்புள்ளிவைத்து நுகவர்வோருக்கும், விவசாயிகளுக்கும் பயனை பெற்றுக்கொடுக்கும் நீண்டகால தீர்வுகள் அடுத்த பெரும்போகத்துடன் கிடைக்கப்பெறும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதல் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அறிவிக்கும் விசேட ஊடகவிலாளர் சந்திப்பு நேற்று புதன்கிழமை அரசாங்க 02 →

## கிழக்கு அபிவிருத்திக்கு சீனா நன்கொடை

**எஸ். கீதபொன்கலன்**

இலங்கைக்கான சீனத்தூதுவர் கியூ செங் வொங் நேற்று(20) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தனசேகரவை திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தித்து கலந்துரையாடினார்.

தமது நாட்டின் சார்பில் கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களுக்கென ரூபா 8 மில்லியன் நிதி அன்பளிப்பையும் சீனத் தூதுவர், ஆளுநரிடம் வழங்கி வைத்தார்.



## தவறு செய்திருந்தால் என்னை தூக்கிலிடுங்கள்

**எஸ்.டொரின்**



பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (20) முன்னிலையாகினார்.

இதன்போது, சுமார் 5 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிவிட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து அவர் வெளியேறினார்.

ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் செனல் 4 தொலைக்காட்சி தயாரித்த விசேட செவ்வி ஒன்றில் சிவனேசதுரை சந்திரகாந்தனின் 02 →

## ரணில் உட்பட 39 பேருக்கு எதிராக அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல்

**பாலகணேஷ் டிலுக்ஷா**


கடந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அப்போதைய நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏனைய பிரதிவாதிகளும் மதுவரிச் சட்டத்திற்கு முரணான மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங் கியதன் மூலம் அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக தீர்ப்பளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கண்டியில் மதுபானம் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வரும் இருவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

முன்னாள் நிதி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி, நிதியமைச்சின் செயலாளர், வர்த்தக 02 →

## அநுர குமாரவை ஆட்சிக்கு அமர்த்தியதன் பின்புலத்தில் அமெரிக்கா: இந்திய பேராசிரியர்

### ஜே.வி.பியின் கொள்கை மாற்றத்துக்கு வித்திட்டவர் சந்திரிக்காவே



**சுப்ரமணியம் நிஷாந்தன்**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை ஆட்சிக்கு கொண்டுவருவதில் அமெரிக்கா மிகப்பெரிய இராஜதந்திர சக்தியாக தமது செல்வாக்கை செலுத்தியுள்ளதாக இந்தியாவின் புவிசார் அரசியலில் புகழ்பெற்ற பேராசிரியரும் ஆய்வாளருமான எஸ்.டி.முனி தெரிவித்துள்ளார்.

பலர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் வெளிநாட்டு சக்திகள் இலங்கைத் தீவின் அரசியல் மாற்றத்தில் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

புதுடில்லியில் உள்ள முன்னணி பல்கலைக்கழகமொன்றில் உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது, ”இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆட்சி மாற்றங் களில் அமெரிக்கா பாரிய இராஜதந்திர 02 →

## மண்மேடு சரிந்து வீழ்ந்து மாணவன் உயிரிழப்பு



**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி மாவட்டத்தில் பல பிரதேசங்களில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழை காரணமாக தெல்தெனிய மெததும்பர மொரகஹமுல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில், 16 வயதுடைய டபிள்யூ . கயான் என்ற பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (20) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெல்தெனிய பொலிஸார் தெரிவிக்கின்றனர். 02 →

## 2,60,000 விவசாயிகளுக்கு விவசாய ஓய்வூதியம் இன்னும் இல்லை

### கணக்காய்வாளர் நாயகம் அதிர்ச்சி தகவல்

**முகம்மட் முக்தார்**

விவசாய ஓய்வூதியம் பெறவேண்டிய இரண்டு இலட்சத்து 60, 000 விவசாயிகளுக்கு விவசாய ஓய்வூதியம் வழங்குவதற்கு கமத்தொழில் காப்புறுதி சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையென தேசிய கணக்காய்வாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் மூலம் அறிய வந்துள்ளது.

நாடாளாவிய ரீதியில் விவசாயிகள் காப்புறுதித் திட்டத்தில் எட்டு இலட்சத்து 22,000 பேர் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். இவர்களிடமிருந்து மாதாந்த ஓய்வூதியக் கட்டணமும் அறவிடப்படுகிறது. 02 →

## பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை

### முஸ்லிம் பாடசாலைகள் டிசம்பர் 13 மூடப்படும்

**முகம்மட் முக்தார்**

நாடாளவிய ரீதியிலுள்ள தமிழ், சிங்கள பாடசாலைகள் இவ்வருட மூன்றாம் கல்வித்தவணையின் முதலாம் கட்ட விடுமுறைக்காக நாளை (22) ம் திகதி மூடப்படுமென கல்வி அமைச்சு அறிவித்து.



இவ்வாறு மூடப்படும் பாடசாலைகள், 2024 ம் ஆண்டின் இறுதி தவணையின் இறுதி கல்வி நடவடிக்கைகளுக்காக 2025 ஜனவரி 02 ம் திகதி மீளவும் திறக்கப்படவுள்ளது.

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட தவணை விடுமுறைக்காக அப்பாடசாலைகள் டிசம்பர் 13 ம் திகதி மூடப்பட்டு 2024 ம் ஆண்டின் இறுதி 02 →

# நேர்மறையான திருப்புமுனையை காட்டிய தேர்தல் - ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்

(கனூஷியா புஷ்பகுமார்)

ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும் போது இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் (TISL) இன் இலங்கைக்கான பொதுச் சொத்து துஷ்பிரயோகத்திற்கு எதிரான திட்டத்தின் தேசிய இணைப்பாளர் சட்டத்தரணி துஷானி கந்தில்பான தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாட்டின் அரசியல் கலாசாரத்தில் ஒரு நேர்மறையான திருப்புமுனையை தெளிவாக காட்டிய தேர்தல் இது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் அரச வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக டிரான்ஸ்பரன்சி நிறுவனத்துக்கு ஒரே ஒரு முறைப்பாடு மாத்திரமே கிடைக்கப்பெற்றதாக அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது 1126 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், அவற்றில் 650 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பொது மைதானங்கள், அரச அலுவலகங்கள், கட்டிடங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் 451 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் கந்தில்பான தெரிவித்தார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில், தேர்தல் பிரசாரங்களின் போது பொது வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதில் சிறப்பு கவனம் செலுத்தி நாடு முழுவதும் 200 கண்காணிப்பாளர்களை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் (TISL) நியமித்தது.

கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில் பொது நிதி மற்றும் அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்வதில் குறிப்பிடத்தக்க சாதகமான மாற்றம் காணப்படுவதாகவும் துஷானி கந்தில்பான தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களினால் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு பதவி உயர்வு வழங்குவது தொடர்பில் 63 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இது கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாக்காளர்கள் மீது செல்வாக்கு செலுத்துதல், சட்டவிரோத தேர்தல் பிரசாரங்கள் மற்றும் வாக்குகளை வாங்கும் முயற்சிகள் தொடர்பாக 215 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## ஜனாதிபதியின் கொள்கை

தமது கொள்கை விளக்க உரையை ஆரம்பிப்பார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதியை வரவேற்கும் நிகழ்வுகளுக்கு பாரிய அளவில் அரச நிதி செலவு செய்யப்பட்டதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்திருந்தன. என்றாலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரைக்காக நாடாளுமன்றம் கூடிய போது, இந்த செலவுகள் ஓரளவு குறைக்கப்பட்டிருந்தன. தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முழுமையாக செலவுகளை குறைக்கும் வகையில் மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்லுமாறு நாடாளுமன்ற செயல்பாடுகள் தொடர்பிலான அலுவலகத்திற்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

வரவேற்பு வைபமும் மிகவும் எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்ந்துநாடாளுமன்றம்ஒத்திவைக்கப்படும் என்பதுடன், மீண்டும் கூடுவதற்கான திகதியை ஜனாதிபதி அறிவிப்பார்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் தேசிய மக்கள் சக்திக்கு பாரிய ஆதரவை வழங்கியுள்ளதால் ஜனாதிபதி அநுரகுமார திசாயக்கவின் உரையானது இலங்கையில் வாழும் மூவின மக்களது அபிலாசைகளையும் பிரதிபளிக்கும் வகையில் இடம்பெறும் என்றும் அரச தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கையில் உள்ள இராஜதந்திரிகளும், இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட பல சர்வதேச நாடுகளும் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை உற்றுநோக்கியுள்ளன.

அரசாங்கத்தின் முதலாவது கொள்கை விளக்க உரை என்பதால் இந்த உரையில் சமகால அரசாங்கத்தின் எதிர்கால நகர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை இதன் ஊடாக அவதானிக்க இராஜதந்திரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

அணிசேரா கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பதே பொருத்தமாக அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் பணியாற்றிய போது அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

அதனால் அவரது சர்வதேச கொள்கைகள் அணிசேராக் கொள்கையாகவே இருக்கும் என்றும் இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகளுடன் சுமுகமான உறவையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்பற்றும் என்றும் அரச ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## 2,60,000 விவசாயிகளுக்கு

2024 ம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 61 வயது முதல் 93 வயதுக்குட்பட்ட விவசாய காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 04 இலட்சத்து 74,247 ஆகும். இவர்களில் மேற்படி 2,60,000 பேருக்கு விவசாயக் காப்புறுதி ஓய்வூதியம் வழங்கப்படவில்லையெனவும் கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் 12 விவசாய காப்புறுதி மாவட்டக்காரியாலயங்கள் அமைந்துள்ளன. இவற்றின் மூலமே விவசாயக் காப்புறுதி ஓய்வூதிய திட்டத்தில் விவசாயிகள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். .

60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகளை கண்டறிந்து அவர்களுக்கான விவசாய காப்புறுதி ஓய்வூதியத்தை வழங்குமாறு தலைமைக்காரியாலயத்தால் அறிவிக்கப்பட்ட போதும் ஆறு மாவட்டக்காரியாலயங்கள் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## மண்மேடு சரிந்து

குறித்த மாணவன் மண் மேட்டுக்கு அடியில் உள்ள அறையொன்றில் உறங்கிக் கொண்டிருந்த நிலையில் இவ்வாறு மண் சரிந்துள்ளது எனவும் பக்கத்து அறையில் இருந்த மாணவனின் பாட்டன் மற்றும் பாட்டி ஆகியோரும் காயமடைந்த நிலையில் மெததும்பர வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனரென தெரியவருகின்றது.

கண்டி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நேற்று பிற்பகல் பலத்த மழை பெய்ததுடன், அதன் காரணமாக மெததும்பர மொரகஹ முல பிரதேசத்தில் வீடொன்றின் மேல் மண் சரிந்து வீழ்ந்ததன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மண் மேட்டின் கீழ் புதையுண்டிருந்த மாணவனை பிரதேசவாசிகள் பெரும் பிரயத்தனத்துடன் மீட்டு வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரிசி தட்டுப்பாட்டை

தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான மூவர் அடங்கிய அமைச்சரவை கடந்த காலத்தில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

விவசாய அமைச்சு, வர்த்தக அமைச்சு, பாவனையாளர் அதிகார சபை உட்பட உரிய தரப்பினருடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இவ்வாறு நடத்தப்பட்டு சேகரிக்கப்பட்ட தரவுகளில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. இவற்றை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவ அவசியமாகும்.

எமது நாட்டில் அரிசி உற்பத்தியானது மேலதிகமாகவே உள்ளது. ஆனால், நுகர்வோர் சந்தைக்குச் சென்றால் அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது. அதனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரிசி தட்டுப்பாட்டுக்கு உடனடி தீர்வொன்று அவசியமென தீர்மானித்தோம்.

விவசாய அமைச்சும், வர்த்தக அமைச்சும் இணைந்து உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தியது. குறித்த கலந்துரையாடலில் எட்டப்பட்ட தீர்மானம் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக 70ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசுக்குச் சொந்தமான சதொச வலையமைப்பு மற்றும் எஸ்.டி.சி ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஊடாக இந்த செயல்பாட்டை செய்ய உள்ளோம். எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இந்த அரிசியை சந்தைக்கு விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசியை 220 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யவும் முடியாது. இந்த நிபந்தனையின் கீழ் குறிப்பிட்ட சில இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும். இதன்போது அரிசியின் தரம் குறித்தும் அவதானம் செலுத்தப்படும். கடந்த காலத்தை போல் அல்லாது உரிய முறைமையின் கீழ் இந்த செயல்பாடு இடம்பெறும்.

எமது நாட்டில் சில மாவட்டங்களில் இரண்டு போக நெல் உற்பத்தியும் சில மாவட்டங்களில் மூன்றுபோக உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு போகங்களாக நெற் உற்பத்தி கணக்கிடப்பட்ட போது 4 மில்லியன் மெட்ரிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 3.1 மில்லியன் மெட்ரிக் தொன் நாடு அரிசிக்கான நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

எமது நாட்டில் நாடு அரிசியையே மக்கள் அதிகமாக உணவுக்காக பயன்படுத்துகின்றனர். அதனால் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் 65 வீதமானவை நாடு அரிசியாகும். 3.1 மில்லியன் நெல்லை அரிசியாக்கினால் 2.1 மில்லியன் மெட்ரிக் தொன் கிடைக்கப்பெறும். ஒரு மாதத்துக்கு ஒரு இலட்சத்து 40ஆயிரம் வரையிலான நாடு அரிசியே மாதமொன்றுக்கு அவசியமாக உள்ளது. சம்பா, சிவப்பு அரிசி உட்பட ஏனைய அரிசியல் உள்ளடங்களாக 2 இலட்சம் மெட்ரிக் தொன்தான் மாதமொன்றுக்கு அவசியமாக உள்ளது.

அரிசி உற்பத்தியை கணக்கிட்டால் மாதமொன்று 40ஆயிரம் மெட்ரிக் தொன் நாடு அரிசி மேலதிகமாக உள்ளது. இந்த அரிசி எங்கு செல்கிறது எனத் தெரியவில்லை. பியர் உற்பத்தி உட்பட சில உற்பத்திகளுக்கு மிகவும் குறைவான அரிசியே பயன்படுத்தப்படுகிறது. இங்கு பாரிய மோசடிகள் இடம்பெறுகின்றன.

அரிசி பற்றாக்குறையையும் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தி மேலதிக இலாபத்தை ஈட்ட அரிசி ஆளை உரிமையாளர்கள் முற்படுகின்றனர். அதனை சமநிலைப்படுத்தவே அரிசி இறக்குமதிக்கு அனுமதி அளிக்க உள்ளோம். 70ஆயிரம் மெட்ரிக்தொன் வரையறை என்ற அடிப்படையில்தான் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2025ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதியளவில் இந்த அரிசி சந்தையில் நுகரப்பட்டிருக்கும். அதன் பின்னர் பெரும்போக உற்பத்தி எமக்கு கிடைக்கும். தற்காலி தீர்வாக அரிசி இறக்குமதி செய்யப்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ள போதிலும், நீண்டகால தீர்வு அடுத்த பெரும்போகத்துடன், கிடைக்கும்.

எதிர்காலத்தில் ஆளை உரிமையாளர்களுக்கு கடன் வழங்கும் போது இதுகுறித்து கவனம் செலுத்தப்படும். கடன்களை பெற்று கொள்வனவு செய்யும் நெல்லை களஞ்சியப்படுத்தி வைத்துக்கொள்கின்றனர். ஆனால், அரிசியை சந்தைக்கு விநியோகிக்காதுள்ளனர். இடைநிலை தரகர்கள் பாரிய இலாபத்தை பெறுகின்றனர். நுகர்வோருக்கும் விவசாயிகளுக்கும் எவ்வித பயனும் இல்லை. இதனால் கடன் வழங்கும் போது அவர்களது நன்மதிப்பு குறித்து இறுக்கமாக தீர்வுகள் கடைப்பிடிக்கப்படும்." என்றார்.

## அநுர குமாரவை

செல்வாக்கை செலுத்தியுள்ளது. இந்தத் தேர்தலில் அமெரிக்க இராஜதந்திர வட்டாரம் ஆழமான செல்வாக்கை செலுத்தியுள்ளன.

அநுரகுமார திசாநாயக்க தனது எழுச்சிக்கு அமெரிக்காவிற்கும் கொழும்பில் உள்ள அதன் இராஜதந்திரிகளுக்கும் கடமைப்பட்டிருக்கிறார். இலங்கையின் அரசியல் பரிணாமத்தின் பின்னணியில் உள்ள சக்தி இயக்கவியலை இந்த செல்வாக்கு எடுத்துக்காட்டுகிறது. பலர் ஒப்புக்கொள்ள விரும்பாவிட்டாலும் வெளிநாட்டு சக்திகள் இலங்கை தீவின் அரசியல் மாற்றங்களில் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளன.

அநுரகுமார திசாநாயக்க புரட்சிகர இலட்சியங்களிலிருந்து மேலும் ஜனநாயகக் கண்ணோட்டத்திற்கு படிப்படியாக மாறி வருகிறார். அநுரகுமார திசாநாயக்க இப்போது வித்தியாசமான நபராக மாறிக்கொண்டிருக்கிறார். அவர் ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகளை புரிந்து கொள்ள முயற்சிக்கிறார். அவர் தனது அனுபவங்களிலிருந்து நிறைய கற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் மாற்றத்தின் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து ஜே.வி.பி.யின் சித்தாந்தத்தை மறுவடிவமைப்பதில் முக்கிய நபராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவே திகழ்ந்தார். ஜே.வி.பியை அதன் வன்முறை மனப்பான்மையிலிருந்து வெளியேற்றி ஜனநாயகத்தை நோக்கி பயிற்றுவித்தவர் சந்திரிகாதான்.

ஜே.வி.பியை அதன் புரட்சிகர வேர்களில் இருந்து விலக்கி மிகவும் நடைமுறை மற்றும் ஜனநாயகப் பாதையை நோக்கி வழிநடத்துவதில் முக்கிய பங்கை சந்திரிகாவே வகித்திருந்தார்.

சாதகமான முன்னேற்றங்கள் உள்ள போதிலும் இலங்கையின் அரசியல் கட்டமைப்பின் எதிர்காலம் நம்பிக்கையை கட்டியெழுப்பும் பாதை தொலைவிலேயே உள்ளது. சிறுபான்மையினரின் கவலைகளை உண்மையாக நிவர்த்தி செய்து அவர்களை தேசத்தின் சமமான மற்றும் ஒருங்கிணைந்த உறுப்பினர்களாக உணரவைக்கும் புதிய யோசனைகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இலங்கைக்கு வந்துவிட்டது." என்றார்.

## பாடசாலைகளுக்கு நாளை

கல்வி நடவடிக்கைகளுக்காக 2025 ஜனவரி 02 ம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

2024 ம் ஆண்டிற்கான சகல கல்வி நடவடிக்கைகளும் 2025 ஜனவரி 24 ம் திகதி முடிவுறும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## ரணில் உட்பட 39

அமைச்சர் வசந்த சமரசிங்க, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட 39 பேரின் பெயர்கள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் நோக்கத்துடன் இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மது வரிச் சட்ட விதிகளைத் தவிர்த்து தன்னிச்சையான மற்றும் அநீதியான முறையில் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## தவறு செய்திருந்தால்

முன்னாள் செயலாளரான அசாத் மௌலானா என்பவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அதில் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரிகளுக்கும் தொடர்பு இருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், அவர் வெளிப்படுத்திய இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் தற்போது அங்கு முன்னிலையாகியுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிவநேசதுரை சந்திரகாந்தன், எனக்கு பயமே இல்லை. என்னை ஏன் கைத செய்ய வேண்டும். நான் பிழை செய்தால் தான் பயப்படவேண்டும். இந்த அரசாங்கத்தில் சிஜடியினர் இப்படி செயற்படுவது மிகவும் வருத்தமளிக்கின்றது.

வெறுமனே சிறுபிள்ளைகளிடம் கேள்வி எழுப்புவது போல் என்னிடம் கேள்வி கேட்க வேண்டாம். இப்பொழுது மக்களுக்கு அனைத்தும் நன்கு தெரியும். யார் நல்லவர் கெட்டவர் என என்னிடம் வினவ வேண்டாம்.

நான் சிறையில் இருந்த காலத்திலிருந்து இந்த பிரச்சினை என்னை தொடர்கின்றது. இது தொடர்பில் அரசாங்கம் தான் கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை ஏன் சசிஜடியினர் செய்கின்றனர். அது தான் புதுமையாக இருக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் இதற்கு உடந்தை.

நான் பிழை செய்திருந்தால் என்னை தூக்கில் இடுங்கள் என நான் இப்போது அல்ல நாடாளுமன்றிலும் இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளேன்.

முதலில் வெளிநாட்டில் பதுங்கி வாழும் அசாத் மௌலானாவை நாட்டிற்கு வரவழையுங்கள். அப்போது தான் சரியான தகவல் அதாவது உண்மை வெளிச்சத்துக்கு வரும்.

ஊடகத்தினரும் ஆய்வு செய்து ஆராய்ந்து செய்தியை பிரசுரியுங்கள். நான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளேன். அதை சிங்கள மொழியும் வெகு விரைவில் மொழிபெயர்க்கவுள்ளேன். அதையும் அனைவரும் படியுங்கள் அப்போது இந்த ஈஸ்டர் தாக்குல் தொடர்பில் அனைவரும் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் தானே.. என்றார்.

## அமைச்சர் ஹேரத்துக்கு

தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ள வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

நட்புறவின் வரலாற்று உறவுகளை வலுப்படுத்த தயாராக இருப்பதாகவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

## ஹரினுக்கு பிணை

ஆதரவாளர்களின் அரசியல் பிரசாரத்தை பொலிஸார் நிறுத்த முற்பட்டதையடுத்து, பதுளையில் பதற்றமான சூழல் நிலவியது.

இந்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஹரின் பெர்னாண்டோ நேற்று புதன்கிழமை காலை பதுளை பொலிஸ் நிலையத்தின் முன்னிலையாகியிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை, இந்திய மீனவர் விவகாரம்

# அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுகளில் இணக்கத்தை எட்டவே விரும்புகிறோம்



## ஆரம்பத்திலேயே நேரடி தலையீடுகள் இல்லை என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கை, இந்திய மீனவர் விவகாரத்தை சுமுகமாக தீர்க்கவே சமகால அரசாங்கம் விரும்புகிறது. அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெறும் பேச்சுகளில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் என எதிர்பார்க்கிறோம். அதனால் ஆரம்பத்திலேயே அரசாங்கத்தின் உயர்மட்ட நேரடி தலையீடுகள் இந்த விடயத்தில் இருக்காது என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இலங்கை கடல்வளத்தையும், மீன்வளத்தை பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் உறுதியாக எடுக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய, இலங்கை மீனவர்கள் விவகாரத்தில் சமகால அரசாங்கத்தின் ஆரம்பகட்ட நகர்வுகள் எவ்வாறு இருக்கும் என "ஒருவன்" பத்திரிகை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் சுட்டிக்காட்டியதாவது,

இந்திய, இலங்கை மீனவர்களின் விவகாரம் எதிர்காலத்தில் சுமுகமாக தீர்க்கப்படும். சமகால அரசாங்கம் ஆரம்பத்திலேயே நேரடியாக உயர்மட்ட கலந்துரையாடல்களை இந்த விடயத்தில் மேற்கொள்ளப் போவதில்லை. இருநாட்டு அதிகாரிகள் மட்டத்தில் தற்போது பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பேச்சுகளே சரியானதாக இருக்கும். அதனை சமகால அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அந்தப் பேச்சுளின் ஊடாக எதிர்காலத்தில் சாதகமான முடிவுகள் எடுக்கப்படும்.

டிசம்பர் நடுப்பகுதியில் இடம்பெறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணத்தில் இந்த விடயம் தொடர்பில் அதிக முக்கியம் கொடுக்கப்படாது. பொருளாதாரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்தே முக்கியத்துவம் அளிக்கப்படும். ஆனால், இந்த விடயம் தொடர்பில் சாதாரண பேச்சுகள் இடம்பெறும்.

எவ்வாறாயினும் எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. எமக்குச் சொந்தமான கடற்பரப்பில் அத்துமீறும் செயல்பாட்டை நாம் எதிர்க்கிறோம். இந்திய அரசாங்கத்தின் சட்டங்களையும் மீறிதான் இந்திய மீனவர்கள் எமது கடல்பரப்பில் மீன்பிடிக்கின்றனர்.

இந்தியாவின் சட்டம், தமிழ்நாட்டின் சட்டம் என்பன ரோலர் அல்லது இழுவை படகு மீன்பிடியை எதிர்க்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள பல மீனவச் சங்கங்களும் இழுவைப் படகு மீன்பிடியை எதிர்க்கின்றன. கட்டாயம் அதனை நிறுத்த வேண்டும். இந்தச் செயல்பாடு தொடர்ந்தால் இந்திய மீனவர்களுக்குக் கூட மீன்பிடிக்க முடியாத நிலைமை ஏற்படலாம்.

இந்த நிலைமையை கடந்த கால அரசாங்கங்கள் எந்தளவு தெளிவுபடுத்தினார்கள் எனத் தெரியவில்லை. இலங்கையின் மீன்வளம் மற்றும் கடல் வளத்தை முழுமையாக பாதுகாத்துக்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும்." என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்திகை மாதம் 06ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** உடல் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும்.

**ரிஷபம்** கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்க வேண்டும்

**மிதுனம்** பெற்றோரின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனமும் அக்கறையும் காட்ட வேண்டும்.

**கடகம்** வியாபாரத்தில் லாபமும் மன மகிழ்ச்சியும் உன்டாகும்

**சிம்மம்** கணிசமான அளவு பணமும், அதனுடன் மன அமைதி இருக்கும்.

**கன்னி** அனுபவம் வாய்ந்த நபரின் ஆலோசனையின்றி எந்த வேலையும் செய்ய வேண்டாம்.

**துலாம்** இன்று வீட்டில் சின்ன சின்ன பொருட்களால் உங்கள் பணம் செலவாக கூடும்

**விருட்சிகம்** உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து எதிர்பாராத பரிசுகளும் அன்பளிப்புகளும் வரும்

**தனுசு** நிதிப் பிரச்சினை காரணமாக சில முக்கியமான வேலை தடைபடும்.

**மகரம்** அதிக வேலை உள்ள நாளாக இருந்தாலும் உடல்நலம் மிகச் சரியாக இருக்கும்.

**கும்பம்** உங்கள் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** ஒரு குடும்ப உறுப்பினரின் நோய் காரணமாக, நீங்கள் நிதி சிக்கல்களை சந்திக்க நேரிடும்

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சஷ்டி திதி இரவு 09:51 PM அதன் பிறகு சப்தமி திதி.
**நட்சத்திரம்:** பூசம் நட்சத்திரம் இரவு 08:36 PM அதன் பிறகு ஆயில்யம் நட்சத்திரம்.
**யோகம்:** அமிர்த-சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** மூலம், பூராடம்.
**இராகு காலம்:** மதியம் 01:30 PM முதல் 03:00 PM வரை,
**குளிகை:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,
**எமகண்டம்:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,

# தலைநகர் கொழும்பில் தமிழ் பிரதிநிதித்துவம் காலத்தின் அவசியம்

## மனோகணேசனுக்கு சஜித் வாய்ப்பளிக்க வேண்டும்



நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் அனைத்து மலையக மாவட்டங்களில் இருந்தும் தமிழ் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ள நிலையில், கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கபட்டுள்ளது. தலைநகரில் தமிழ் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியது காலத்தின் அவசியம் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

"கொழும்பு மாவட்டத்தில் இம்முறை தமிழ் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், கொழும்பில் மூன்று தமிழ் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வாய்ப்பிருந்தும் ஒருவர்கூட தெரிவாகவில்லை.

கொழும்பில் தமிழ் பிரதிநிதித்துவம் என்பது காலத்தில் கட்டாயமாகும். இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொழும்பில் வாழ்கின்றனர். அவர்களுக்கு கட்டாயம் தமிழ் பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் தலைநகரில் தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்ட நிலையில், இம்முறை இப்பிரதிநிதித்துவத்தை மக்கள் இழந்துள்ளனர்.

இ.தொ.கா மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு இடையில் கொள்கை ரீதியான மாறுபட்ட கருத்துக்கள் உள்ள போதிலும், தமிழ் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க செய்ய வேண்டும் என்பதில் இ.தொ.கா உட்பட ஏனைய தமிழ் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேலதிகமாக 2 மேற்பட்ட ஆசனங்களை பெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. என்றாலும், தேர்தலில் வெற்றிப் பெற போவதில்லை என அறிந்தும் பல்வேறு தமிழ் சுயேட்சை குழுக்கள் தமிழ் வாக்குகளை சிதறடிக்கும் நோக்கில் களமிறக்கப்பட்டன. இதனூடாக கடந்த காலங்களில் மக்களுக்காக பல்வேறு சேவைவைகளை முன்னெடுத்த மருதப்பாண்டி ராமேஸ்வரன் சொற்ப சில நூறு வாக்கு குறைவால் நாடாளுமன்றம் தெரிவு செய்வதற்கு தடையாக அமைந்தது.

அதனை தொடர்ந்து அதற்கு அடுத்தப்படியாக இருக்கும் சக்திவேலுக்கும் நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டது. இவர்கள் இருவரைவிட குறைந்த வாக்குகளை பெற்ற சிலர் நாடாளுமன்றத்திற்குச் சென்றுள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தலில் கொழும்பில் ஏனைய கட்சிகளை விட ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர் மனோ கணேசன் அதிக தமிழ் வாக்குகளை பெற்றுள்ளார்.

# அத்துமீறிய 12 இந்திய மீனவர்கள் விடுதலை: நால்வருக்கு சிறை

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடலில் வைத்து கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 12 பேரை நிபந்தனைகளுடன் விடுவித்தும் ஏனைய நால்வருக்கு சிறைத்தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து புறப்பட்டு கடந்த ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட 16 மீனவர்களின் வழக்கு நேற்று (20) ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதி கைது செய்யப்பட்ட 16 மீனவர்களில் இருவர் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை காலத்தில் இரண்டாவது முறையாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதால் அந்த இருவருக்கும் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும், ஒரு படகின் உரிமையாளரே ஓட்டுநர் என்பதால் அவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும், மற்றொரு படகின் ஓட்டுனருக்கு 6 மாத சிறைத் தண்டனையும் விதித்து உத்தரவிட்டார். அத்துடன் எஞ்சிய 12 மீனவர்களை 18 மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனையுடன் விடுதலை செய்தும் உத்தரவிட்டார்.

# மன அழுத்தமில்லாத கல்விக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

(கனுஷியா புஷ்பகுமார்)



அடுத்த மறுமலர்ச்சி யுகத்திற்கு ஏற்ற பிரஜைளை உருவாக்கக்கூடிய மன அழுத்தமில்லாத கல்விக்காக மாணவர்களின் நம்பகத்தன்மையை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் தனது அமைச்சுப் பதவியை நேற்று புதன்கிழமை (20) பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, "கல்வி போன்றதொரு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

விடயத்தின் ஆழத்தை தான் முழுமையாக புரிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். புதிய அரசின் கொள்கைகளின்படி, கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, பாடசாலைக் கல்வியானது முறையாகவும் கால ஒழுங்கிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும், தற்போது கல்வித்துறையில் நிலவும் பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்." என தெரிவித்தார்.

# ஆவணங்களற்ற மற்றுமொரு வாகனம் கண்டியில் பறிமுதல்

( எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி, கெங்கல்ல பிரதேசத்தில் உள்ள வாகனத் தளமொன்றில் (யாட்) இருந்த கெப் வண்டி தொடர்பான ஆவணங்களை முன்வைக்க முடியாத காரணத்தினால், தெல்தெனிய பொலிஸார் நேற்று முன்தினம் (19) குறித்த கெப் வண்டியை பறிமுதல் செய்துள்ளனர்.

கண்டி மற்றும் கண்டியை அண்மித்துள்ள பகுதிகளில் அண்மைக்காலமாக இவ்வாறு பல பதிவு செய்யப்படாமல் சட்ட விரோதமாக பாவிக்கப்பட்ட வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர்.

சில வருடங்களுக்கு முன்னர் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது எனக் கூறப்படும் இந்த வாகன தளத்தில் அடகு வைக்கப்பட்ட வாகனங்கள் பல இருப்பதும் தெரியவந்துள்ளது.

# மாத்தறையில் நபர் ஒருவர் அடித்துக் கொலை

மாத்தறை ஊருபொக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டிகல பிரதேசத்தில் 44 வயதுடைய நபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்ட நபர் தண்ணீர் எடுப்பதற்காக வீட்டிலிருந்து வெளியில் சென்றபோது மர்ம நபர் ஒருவர் இவரை அடித்து காயப்படுத்தியுள்ளார். காயமடைந்தவர் எம்பிலிபிட்டிய வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். தனிப்பட்ட தகராறின் காரணமாக இக் கொலை சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொலையை செய்த சந்தேக நபரை கைது செய்வது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தென் கொரியாவில் பருவகால வேலைவாய்ப்பு:

# E8 விசா முறையின் கீழ் பணியாளர்களை பரிந்துரைப்பது குறித்து அமைச்சர் கவனம்

(பாலகணேஷ் டிலுக்ஷா)

தென் கொரியாவில் பருவகால வேலைவாய்ப்புக்காக E8 விசா பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட முறைக்கு மாறாக சில தரப்பினர் செயற்பட்டதால் அந்த வேலைகளுக்காகக் காத்திருக்கும் தொழிலாளர்களின் அசௌகரியங்கள் குறித்து வெளிவிவகார, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் கவனம் செலுத்தியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு நேற்று புதன்கிழமை (20) விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அது தொடர்பான பணியாளர்கள் குழுவுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

தென் கொரியாவில் E8 விசா முறையின் கீழ் பணியாளர்களை பரிந்துரைப்பது குறித்து மேலும் ஆராய்வதற்கும், அது தொடர்பான சட்ட நிபந்தனைகளைக் கண்டறிந்து எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அமைச்சர் தீர்மானித்துள்ளார். இந்த விசேட கலந்துரையாடலில் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க, பொது முகாமையாளர் டி.டி.பி. சேனநாயக்க மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தென்கொரிய E8 விசா வகை வேலைவாய்ப்பு ஆட்சேர்ப்பு மற்றும் அனுப்பும் முறையை உரியமுறையில் ஆராய்ந்து சட்டரீதியானதாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

# சட்டவிரோதமான துப்பாக்கிகளுடன் ஐவர் கைது

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்ட விரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிக்கவெரட்டிய, கொலன்ன, ஹபராதுவ, இங்கினியாகல, பொத்துவில் ஆகிய இடங்களிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தேசியப் பட்டியல் என்பது கட்சிகளின் நலன்களுக்கு அல்ல

தேர்தல் முடிவுகளின் பின்னர் இலங்கை அரசியல் களம் மேலும் சூடு கண்டுள்ளது. பாரம்பரிய கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலை காரணமாக உள்ளக நெருக்கடிகள் அதிகரித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகிறது.

இலங்கை அரசியலில் முக்கிய கட்சிகளாக கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி மற்றும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளில் தேசிய பட்டியல் காரணமாக சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் கடந்த வாரங்களில் குறித்த கட்சிகள் கொழும்பில் பல கலந்துரையாடல்களை நடத்திய போதும், அவற்றின் மூலம் எதுவித இறுதித் தீர்மானங்களும் கிடைக்கவில்லை.

நடைபெற்று நிறைவடைந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசிய பட்டியலில் மூன்று ஆசனங்களும், புதிய ஜனநாயக முன்னணிக்கு இரு தேசியப் பட்டியல் ஆசனமும் கிடைக்கப்பெற்றாலும் கூட ஒரு பெயர் மாத்திரமே தற்போது வரையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் ஷியாமலா பெரேரா, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்த நிலையில் ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பில் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்கவின் பெயர் இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட விடயம் கட்சித் தலைமையான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்படாத காரணத்தினால் தற்போது கட்சிக்குள் இழுபறி நிலை அதிகரித்து காணப்படுகிறது.

ஆக, தேசியப் பட்டியலால் பதவி யாருக்கு என்ற போட்டி கட்சிகளுக்குள் தீவிரமாகியுள்ளது என்ற தீர்மானத்திற்கு வரக்கூடியதாக உள்ளது.

எனினும், இது ரணிலின் தந்திரோபாயமாக இருக்கவும் கூடும். ரவி கருணாநாயக்கவுக்கு மறைமுகமாக பச்சைக் கொடி காட்டி விட்டு கட்சிக்குள் குழப்ப நிலையை உருவாக்கி எஞ்சியிருக்கும் தேசிய பட்டியல் ஆசனத்தில் ரணில் நுழைய வகுக்கும் ஒரு திட்டமாகவும் இதனை நாம் பார்க்கலாம். ரணிலின் கடந்த கால அரசியல் செயல்பாடுகள் இவ்வாறு சிந்திக்கவும் தூண்டுகின்றன.

தேர்தலில் விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஆரம்பித்த நாட்களில் இருந்தே கட்சிகளிடையே தேசியப் பட்டியலில் குழப்ப நிலை ஏற்படுவது வழமையாகி விட்டது. அதனை மாற்றவும் முடியாது.

எனினும், இவ்வாறு பதவிக்காக பரிதவிக்கும் இவர்கள் ஒன்று மாத்திரம் புரிந்துக்கொள்ள வேண்டும். அரசியல் என்பது மக்களுக்கான சேவையே தவிர வியாபாரம் அல்ல.

ஜனநாயக நாட்டில், ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துவது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான ஒரு விடயம். எனினும், அந்த ஜனநாயகத்தையும், மக்கள் ஆணையையும் மதிக்காத ஒரு நிலையாக இவ்விடயம் பார்க்கப்படுகிறது. அரசியல் தலைமைகள் செயற்படும் விதம் மக்கள் எதிர்ப்பார்க்கும் அந்த மாற்றத்திற்கு வழிவகுக்காது.

கூட்டுக் கட்சிகள் இணைந்து கூட்டணியமைக்கும் போது சில உடன்பாடுகளில் கைச்சாத்திடுகின்றனர். உதாரணத்திற்கு இத்தனை ஆசனங்களை வழங்க முடியும் என்ற ஒப்பந்தத்தின் கீழேயே கூட்டணியமைக்கப்படுகின்றன. இறுதியில் உறுதியளித்த ஆசனங்களை வழங்கும் அளவிற்கு வெற்றி பெறாமையே கட்சிகளுக்குள், கூட்டணிகளுக்குள் சிக்கல்கள் ஏற்பட அடிப்படையாக அமைகிறது.

அரசியலை வியாபாரம் பேசி உடன்படிக்கை மேற்கொள்வதால் தான் இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.

தேசிய பட்டியலாக இருந்தாலும் சரி, போனஸ் ஆசனங்ளாக இருந்தாலும் சரி நாடாளுமன்றத்திற்கு வருவது மக்களுக்கு சேவை செய்வதற்காக என்பதை அரசியல் தலைமைகள் நன்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆக, மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து செயல்படுவதே ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுக்கும்.

நினைத்ததை நினைத்த விதத்தில் செய்வதற்கு அரசியல் தலைமைகளுக்கு வழிவிட முடியாது. கட்சியாக இருக்கட்டும், கூட்டணியாக இருக்கட்டும் ஒன்றாக இணைந்து கலந்துரையாடி ஒரு தீர்மானத்திற்கு வருவதே, ஜனநாயக பாரம்பரியத்துக்கு சிறப்பு சேர்ப்பதாக அமையும்.அதுவே புதிய அரசாங்கம் கோரும் மாற்றத்திற்கும் வித்திடும்.

இலங்கைத்தீவின் அபிவிருத்தி மற்றும் சிறந்த அரசியல் - பொருளாதார மற்றும் கல்வி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை நுட்பமாகச் செய்யக்கூடிய துறைசார்ந்தவர்களை நாடாளுமன்றத்திற்குள் உள்வாங்கும் ஒரு முறைதான் தேசியப் பட்டியல்.

இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே அன்று ஜே.ஆர் ஜயவர்த்தன தேசிய பட்டியல் முறையை அறிமுகப்படுத்தினார். 225 பேர் கொண்ட ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் 196 பேர் தேர்தல் மூலமும் ஏனைய 29 பேரும் தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகின்றனர்.

ஆகவே, அறிவுசார்ந்த மற்றும் திறன்சார்ந்த ஆளுமைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தேசியப் பட்டியல் முறையை ஊழல்மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்குவது மிகவும் தவறு.

அதுவும் பல வருடங்களாக உறுப்பினர்களாகத் தொடர்ந்து பதவி வகித்தவர்களுக்கு வழங்குவது முறையற்றது. ஏனெனில். ஒவ்வொரு துறைகளில் நுட்பமுள்ள புதிய உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதே யாப்பு விதிகளுக்கு அமைவான செயல். ஆகவே, இந்த ஜனநாயக கட்டமைப்பை தேசியப் பட்டியல் தகுதிகளை பெற்றுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் சிந்திக்க வேண்டும். கட்சி நலன் மற்றும் தனிப்பட்ட முறையில் பயன்படக்கூயவர்கள் என்று கருதி தேசியப் பட்டியல் ஆசனங்கள் வழங்கப்பட்டால் பாதிக்கப்படப் போவது சாதாரண மக்கள்தான்.

இதனை பொறுப்புள்ள பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். மக்கள் வாக்களிப்பின் மூலம் பெறப்படும் அதிகாரங்கள் என்பது தனிப்பட்ட நலன்கள் அடிப்படையில் அமைவது ஏற்புடையதல்ல.



# இன்று உலக தொலைக்காட்சி தினம்

▌து. சிந்துஜா

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21 ஆம் திகதி உலக தொலைக்காட்சி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற அனைத்துலகத் தொலைக்காட்சிக் கருத்தரங்கின் விதந்துரைப்பின்படி ஐக்கிய நாடுகள் சபை நவம்பர் 21 ஆம் திகதியை உலகத் தொலைக்காட்சி தினமாக அறிவித்தது.

இதன்படி, முதல் தொலைக்காட்சி தினம் 1997 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் இது வெகுசன ஊடக அமைப்புகளில் மிகவும் முக்கியமானது.

ஒரு தினம் அனுஷ்டிக்கப்பட்டுகிறது என்றால் அதற்கான பின்புலம் மற்றும் வரலாற்றைப் பற்றி நாம் உற்றுநோக்க வேண்டும்.

1800 காலகட்டத்தின் முற்பகுதியில் மின்சாரத்தைப் பயன்படுத்தி கம்பிகள் மூலம் படங்களை அனுப்பும் யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால், சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமாக இதில் எவ்வித முன்னேற்றத்தையும் விஞ்ஞானிகளால் காண முடியவில்லை.

பின், 1920களில் நகரும் படங்களை அனுப்பக்கூடிய இயந்திரங்களை உருவாக்குவதில் கண்டுபிடிப்பாளர்கள் முன்னேற்றம் காணத் தொடங்கினர்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பிரபல கண்டுபிடிப்பாளர் ஜோன் லோகி பைர்ட், உலகின் முதல் வெளிப்படையான செயல்முறை செய்து காண்பிக்கப்பட்ட தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார்.

1920 காலகட்டத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் புழக்கத்தில் வந்தன. இது வணிக மற்றும் பிற விளம்பரங்கள், நிகழ்ச்சிகளுக்கான ஊடகமாக பெரிதும் வளர்ந்தது.

லோகி பேர்ட்டால் உருவாக்கப்பட்ட இயந்திரம் 1926 ஆம் ஆண்டில் மனித முகத்தின் நகரும் படத்தை ரிசீவருக்கு வெற்றிகரமாக அனுப்பியது.

1927 ஆம் ஆண்டில் மின்சாரத்தால் இயங்கும் முதல் தொலைக்காட்சி அமெரிக்காவைச் சேர்ந்த ஃபிலோ டெய்லர் / பென்ஸ்வர்த் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியிலான முதல் பொது தொலைக்காட்சி ஒளிபரப்பு 1936 இல் இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்றது.

1939 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பமானது. அதன்படி, முதல் தொலைக்காட்சி நிலையம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள wnbc ஆகும்.

1950 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் கருத்தை உருவாக்குவதில் தொலைக்காட்சிகள் பங்காற்றின.

1960களில் வண்ணத் தொலைக்காட்சிகள் அறிமுகமானது. இது தொலைக்காட்சிகளை மேலும் பிரபலமாக்கியது.

அதன்பின் கால மாற்றத்தில் தொலைக்காட்சிகளின் வளர்ச்சியும் தொழில்நுட்பமும் உச்சத்தைத் தொட்டது.

1980களில் கேபிள் தொலைக்காட்சி அறிமுகமானது.

மேலும், உலகுடன் தொடர்பு கொள்வதில் தொலைக்காட்சிகளின் பங்கு குறித்து இந் நாள் தெளிவுபடுத்துகிறது.

20 ஆம் நூற்றாண்டில் தொலைக்காட்சி பொது விடயங்களை கட்டமைப்பதில் அதன் ஆதிக்கத்தை செலுத்தியது.

உலகின் தொழில்நுட்ப மாற்றத்தில் எத்தனையோ விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து தற்போது வரை தனக்கான முதல் மற்றும் தனியிடத்தை தக்க வைத்துக்கொள்ள தொலைக்காட்சிகள் என்றும் தவறியதில்லை.

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் பலருக்கு அதுவொரு பொழுதுபோக்கு அம்சம். ஆனால், உண்மையில் தொலைக்காட்சி என்பது ஊடகத்துறையில் பல மாற்றங்களுக்கு வித்திட்டது என்று கூறுவதே சரியானது.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய சாதனம் தொலைக்காட்சி ஆகும்.




ஊடகங்களில் செய்தித்தாள்கள், வானொலி போன்றவை இருந்தாலுமே உலகில் நடக்கும் விடயங்களை நம் கண் முன் ஒலி மற்றும் ஒளியை ஒருசேர கொண்டுவரும் தொலைக்காட்சிகள் மீதான மக்களின் பார்வை என்பது சற்று வித்தியாசமானது.

நம்மால் எண்ணிப் பார்க்கக்கூட முடியாத பல நிகழ்வுகளைக் கூட நாம் இருக்கும் இடத்துக்கு கொண்டு வந்து சேர்த்துவிடும்.


தொலைக் காட்சிகள் என்பது எத்தனையோ பேருக்கு மன அழுத்தத்தைப் போக்கும் ஒரு நிவாரணியாக விளங்குகின்றது எனலாம்.

மேலும் உலகளாவிய ரீதியில் அரசியல், சமூகம், சினிமாத்துறை ஆகியவற்றில் தொலைக்காட்சி ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் அளப்பரியது.

ஒரு நாட்டில் என்னென்ன பிரச்சினைகள், அரசியல் மாற்றங்கள் ஏற்படுகிறதோ அதனை அப்படியே மக்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதில் தொலைக்காட்சியின் சேவை இன்றியமையாதது.

பல தரப்பட்ட அலைவரிசைகளுடன் ஐக்கிய நாடுகள் சபையினால் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி, 2023 ஆம் ஆண்டுக்குள் உலகில் தொலைக்காட்சியைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1.73 பில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

> 1950 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் கருத்தை உருவாக்குவதில் தொலைக்காட்சிகள் பங்காற்றின






# வன்னிக்கு மேலும் ஒரு ஆசனம் 09 ஆக அதிகரித்த பிரதிநிதித்துவம்!

(கி.வசந்தன்)

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக மேலும் ஒரு தேசியபட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்துமுஹம்மது என்பவருக்கே குறித்த தேசியபட்டியல் ஆசனம் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸானது இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டு ஒரு ஆசனத்தை பெற்றுக்கொண்டதுடன், வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கியமக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்ற ஐந்து



தேசியபட்டியல் ஆசனத்தில் ஒன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கு வழங்குவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்து முகமது என்பவருக்கு குறித்த பிரதிநித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது நியமனத்துடன் வன்னி மாவட்டம் 9 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் வைத்தியசாலை: பிரசவத்தில் தாயும் சேயும் மரணம்

## நீதி கோரி உறவினர்கள் போராட்டம்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (19) பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களான இளம் தாயே பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னதாகவே குறித்த பெண்ணுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டிருந்த போதிலும் உரிய விதமாக கவனிக்கப்படவில்லை எனவும் தனக்கு சிசேரியன் செய்யுமாறு அப்பெண் கோரிக்கை விடுத்ததாகவும் வைத்தியர்கள் இயற்கை முறையில் பிரசிவிக்க முயற்சித்த நிலையில் தாயும் பிள்ளையும் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே குறித்த மரணம்



இடம் பெற்றுள்ளதாகவும் மரணம் அடைந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்கு சொல்லாமல் மறைத்ததாகவும் உயிரிழந்த பெண்ணின் உடலைக் கூட பார்பதற்கு பெற்றோரை அனுமதிக்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்ன எனத் தெரிவிக்கும் வரை உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என உறவினர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் பொதுமக்கள்,பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலை பணிப்பாளர், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரம் வருகை தரவில்லை எனவும் அவருடைய தொலைபேசியும் இயங்கவில்லை என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். குறித்த பிரசவ விடுதியில் பணிபுரியும் சில ஊழியர்கள் தொடர்ச்சியாக கவனயீனமாக செயற்படுவதாகவும் வேலை நேரத்தில் தொலைக்காட்சியில் நாடகங்கள் பார்ப்பதாகவும்,தொலைபேசிகளை அதிகம் பயன்படுத்துவதாகவும், பிரசவ விடுதிக்குள் நாய்கள் நிற்பதாகவும் அவற்றைக் கூட அவர்கள் கண்டு கொள்வதில்லை எனவும் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் மன்னார் பொது வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் கவனயீனத்தால் இடம்பெற்ற மரணம் எனத் தெரிவிக்கப்படும் இவ்வருடத்தில் இடம் பெற்ற மூன்றாவது மரணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

பிரேத பரிசோதனைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன் பிரேத பரிசோதனையின் பின்னர் தாய்,சேய் உயிரிழந்தமைக்கான காரணத்தைக் கண்டறிய முடியும் எனவும் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# ஊடகவியலாளர் ரஞ்சன் திடீர் மரணம்!



ஊடகவியலாளர் ஆர்.எஸ்.ரஞ்சன் திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் (19) உயிரிழந்தார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் பல்வேறு ஊடக நிறுவனங்களில் சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்திருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ரஞ்சன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை உபகரணங்கள் அன்பளிப்பு



சாவா-99 அமைப்பினரால்-தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு ஒரு தொகுதி சத்திரசிகிச்சை உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமையன்று (18) வழங்கி வைக்கப்பட்டன.

சத்திரசிகிச்சை நிபுணர் பேராசிரியர் எஸ்.ரவிராஜின் வேண்டுகோளுக்கு இணங்க தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சாவா 99அணி சார்பில் யோ. பிரசன்னா,சி.தீபன்,கி.ரிசோகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். வேட்பாளர் மரணம்

பிரபல தொழிலதிபரும் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவருமான அழகசுந்தரம் கிருபாகரன் (வயது 43) காலமானார்.



உடல் நலக்குறைவு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் (19)மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளராக இவர் போட்டியிட்டார்.

தேர்தல் பிரசார காலங்களில் அவர் திடீர் சுகவீனம் அடைந்து சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

# யாழ்.வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா



யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் (19) பாடசாலை அதிபர் திருமதி சிறிலக்ஸ்மி சுபேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சாதனையாளர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்வி அலுவலக திட்டமிடல் ஆசிரியர் ஆலோசகர் திருமதி ஜனனி லதீர்ஸன் மற்றும் சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் வழங்கிவைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையில் ஒளி விழா

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் ஒளி விழா நேற்று முன்தினம்(19) பாடசாலை அதிபர் சி.குகதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கருத்துரைகளை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மணல்காடு பங்குத்தந்தை ஜோன் குரூஸ் அடிகளார், சிறப்பு விருந்தினர்களாக வலய சுகாதார பாட ஆலோசகர் ஆசிரியர் பாக்கியநாதன், வளனார் சபை அருட்சகோதரி இரத்தினஜோதி,கௌரவ விருந்தினர்களாக பொற்பதி கிராம உத்தியோகத்தர் திருமதி பி. தனுசியா, வளனார் சபை அருட் சகோதரி கிறிஸ்ரா, பொற்பதிகடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் பி. யேசுரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கில் பல்வேறு உதவிகள்

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கமைவாக பாடசாலை வரவு குறைந்த பிள்ளைகளின் வரவை மேம்படுத்துவதற்காகவும், பொதுப் போக்குவரத்து வசதியை இலகு படுத்துவதற்காகவும், மாதாந்தம் வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு



வழங்கும் போக்குவரத்து சேவைக்கான கார்த்திகை மாத வாகன கொடுப்பனவு ரூபா 85,650 வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.


இதே வேளை வவுனியா, கல்மடு பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தினரின் 61 மூத்தோரை கௌரவிப்பதற்காக ரூபா 170,000 பெறுமதியான உடைகள் மற்றும் ரூபா 30,000 நிதியும் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# மூவின மக்களும் உலகுக்கு உணர்த்திய வரலாற்று பாடம்

## 143 புதிய முகங்களால் சுத்தமாக்கப்பட்டுள்ள 10 ஆவது நாடாளுமன்றம்

உமர்லெப்பை யாக்கூப்
ஒலி / ஒளிபரப்பாளர்,
சிரேஷ்ட ஊடகவியலாளர்.



இலங்கை மக்கள் கடந்த ஐந்து வருடங்களில் அனுபவித்த துன்பம் மற்றும் அவலத்தின் வெளிப்பாடுதான் இடம்பெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாகும். வரலாற்றுப் பாடம் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம் அல்லவா... அதன் ஆழமான அர்த்தம் என்ன என்பதை இந்த நாட்டின் மூவின மக்களும் உலகத்திற்கு இத்தேர்தல் மூலம் உணர்த்தியுள்ளார்கள். இந்த தேர்தல் முடிவுகள் பல புதிய செய்திகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தேசிய மக்கள் சக்தியின் மகத்தான வெற்றி என்பதையும் தாண்டி உச்சந்தொட்ட உணர்ச்சிகரமான முடிவுதான் வட மாகாண மக்களின் மனநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். விசேடமாக யாழ்ப்பாண மாவட்ட மக்களின் தீர்மானம் பற்றி சிங்கள மக்கள் வியந்து போய் நிற்கின்றார்கள். பல தசாப்தங்களாக தமிழ் கட்சிகளுக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் மட்டுமே தொடர்ச்சியாக வாக்களித்து வந்த தமிழ் சகோதரர்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று உறுப்பினர்களை பெற்றுக் கொடுத்திருப்பது இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்பட்டுள்ள ஒரு பெரும் திருப்புமுனையாகும். இந்த முடிவு ஒரு புதிய செய்தியை உணர்த்தி நிற்கின்றது. இதற்கு முன்பு எம்மிடம் வந்து வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய சிங்கள தலைவர்களிலும் பார்க்க அநுர குமார திசாநாயக்கா என்ற தலைவரை நாம் நம்புகின்றோம் என்பதேயாகும்.

அந்த மக்களின் நம்பிக்கையை அர்த்தம் உள்ளதாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் அவர் தலைமையிலான புதிய தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் உண்டு. யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இன்னும் ஒரு செய்தியையும் சொல்லி இருக்கின்றார்கள். எம்.ஏ சுமந்திரன் என்ற ஒரு சட்டத்துறை அனுபவமிக்க அரசியல் தலைவரை தோற்கடித்தது மட்டுமல்லாமல் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட ராமநாதன் அர்ஜுனா என்ற இளம் வைத்தியரை தமது பிரதிநிதியாக வெற்றிவாகை சூட வைத்துள்ளதும் அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் ஒரு மாறுபட்ட செய்தியாகும்.

இதே வேளை கிழக்கு மாகாணத்தின் முடிவுகள் இன்னுமொரு விதமாக அமைந்துள்ளது. அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் கட்சிகளுக்கு வழங்கும் வாக்குகளில் பெரும் பின்னடைவு இம்முறை ஏற்பட்டுள்ளது. எண்பதினாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் வழங்கியதன் மூலம் நான்கு உறுப்பினர்களை அந்த கட்சி அங்கு பெற்றுள்ளது.

ஆனாலும் முஸ்லிம்களின் கணிசமான எண்ணிக்கையிலான வாக்குகளால் நான்கு சிங்கள சகோதரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இந்த பிரதேசத்தில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தி நிற்கின்றது. தாம் அளித்த வாக்குகளால் தமது இனம் சார்ந்த பிரதிநிதிகள் ஒருவர் கூட வரவில்லையே என்ற அம்பாரை மாவட்ட முஸ்லிம்களின் ஆதங்கம் நியாயமானதே. அந்த ஏக்கத்தை இனவாத சிந்தனை என்று நினைப்பது நியாயமான ஒன்றாக இருக்க முடியாது. இந்த சூழ்நிலையை சரியாக புரிந்து கொண்டதனால்தான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தலில் அபூபக்கர் ஆதம்பாவா தோல்வி கண்ட போதிலும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களை திருப்திப்படுத்தும் முகமாக அவர்களது அரசியல் அபிலாசைகளை முன் கொண்டு செல்லும் நோக்கில் அவரை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்திருக்கின்றார். அம்பாறை மாவட்டத்தில் இந்த நியமனத்துடன் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

கடந்த முறை 2020 பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த மாவட்டத்தில் இரண்டு உறுப்பினர்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒரு உறுப்பினரையும் தேசிய காங்கிரஸ் ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் நான்கு உறுப்பினர்கள் தெரிவாகி இருந்தார்கள். அப்படி இருந்தும் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை அவர்களால் திருப்திப்படுத்த முடியவில்லை என்பது பாரிய குற்றச்சாட்டாகும். அந்தக் கட்சிகளின் தலைமைகளாலும் இந்த மக்களை திருப்திப்படுத்த முடியவில்லை என்பதன் பிரதிபலிப்பே பெரும் அதிருப்தியாக மாறி இம்முறை 80000 முஸ்லிம் வாக்காளர்கள் தமது ஆதரவை தேசிய மக்கள் சக்திக்கு வழங்க முற்பட்டதன் பிரதான காரணமாகும். அதுமட்டுமின்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றவற்றின் வாக்குகளும் செல்வாக்கும் அங்கு கடும் வீழ்ச்சி கண்டுள்ளன. முஸ்லிம் காங்கிரசின் தனித்துவத்தையும் கௌரவத்தையும் இம்முறை அட்டாளச்சேனை மக்கள் காப்பாற்றி இருப்பது அவர்களால் நன்கு திட்டமிடப்பட்டு அளிக்கப்பட்ட வாக்குகளாலாகும். அதன் காரணமாக அக்கட்சியின் நீண்ட கால உறுப்பினர் எம். உதுமாலெப்பை தெரிவு செய்யப்பட அது வாய்ப்பாகியது. அவரின் தெரிவு பண நோட்டுக்களாலோ அல்லது அரிசிப் பொதிகளாலோ பெறப்பட்டது அல்ல என்பதில் அட்டாளச்சேனை மக்களும் உதுமாலெப்பையும் பெருமைப்படத் தகுதியானவர்கள் தான்.

இதேவேளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு கிடைத்த குறைந்த அளவு வாக்குகளின் அடிப்படையில் தனது சொந்த ஊரான நிந்தவூரில் 5500 அளவிலான வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்ட எம்.எம்.தாஹிர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனாலும் அடுத்தடுத்த கிராமங்களில் மக்கள் அவருக்கு வாக்களித்திருப்பது விசேடமான ஒரு அம்சமாகும். அதன் மூலம் 14511 வாக்குகள் அவருக்கு கிடைத்திருக்கின்றன. ஆனால் அதே ஊரைச் சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரான பைசல் காசிம் தனது சொந்த ஊரில் 6500 வாக்குகள் அளவில் பெற்றிருக்கின்றார். இதன் மூலம் அவரது ஆதரவுத்தளம் பெரிய அளவில் மாறவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் தம்மால் விடப்பட்ட தவறுகளை இம்முறையும் விட்டுவிடாமல் தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொண்டதன் காரணமாக கவீந்திரன் கோடீஸ்வரன் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பெற்ற வாக்குகள் 11,962 ஆகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருகோணமலை மாவட்டத்தில் தமக்கிருந்த ஆசனத்தை இம்முறை இழந்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் இணைந்து போட்டியிட்ட அவர்களின் வியூகம் தோல்வி கண்டுள்ளது.


இதே அணியுடன் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் 30883 வாக்குகளை மட்டுமே பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதே ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் வன்னியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாட்பதி யுதீன் 21018 வாக்குளை பெற்றுள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடும்போது வன்னி மாவட்டத்தில் இந்தக் கூட்டணி 8மூ பின்னடைவை சந்தித்துள்ளது. வன்னியில் இணைந்தும் அம்பாறையில் எதிர்த்தும் இவர்கள் போட்டியிட்டார்கள். அதே போல முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை எதிர்த்தும் கண்டியில் சேர்ந்தும் கேட்கும் அரசியல் கொள்கை என்பது வியப்பும் வினோதமும் நிறைந்த ஒன்றாக அனைவராலும் பார்க்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக வருவது என்பது ஒரு வகையான வியாபாரமாக்கப்பட்டி ருப்பதாகவே இன்னும் தெரிகிறது. ஆறு கோடி அல்லது பத்து கோடிகளை முதலீடு செய்து நாடாளுமன்ற உறுப்பினராகியதன் பின்னர் தமது கொள்கைகளைத் தூக்கி குப்பைத் தொட்டிகளில் எறிந்து விட்டு ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஒவ்வாத நடவடிக்கைகளுக்கு ஆதரவுக்கரம் உயர்த்துவதன் மூலம் பல கோடிகள் சம்பாதிப்பது கடந்த கால கசப்பான வர்த்தகமாகும்.

புத்தளம் மாவட்டத்திலும் ஒரு வேட்பாளர் பதினாறு கோடி ரூபாவுக்கு மேல் அள்ளி இறைத்ததாகவும் தெரியவருகின்றது. இத்தகைய பணமீட்டும் வர்த்தக நோக்கில்தான் பல கோடிகள் கடன் பெற்றாவது இவ்வாறான தேர்தலில் முதலீடு செய்வதை சில வேட்பாளர்கள் ஒரு கடமையாக நினைத்து செயற்பட்டிருக்கின்றார்கள். மக்களுக்கு அரிசிப் பொதிகளும் பண நோட்டுகளும் வழங்கி பெறப்படும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மக்கள் வழங்கும் வாக்குகள் எந்த அளவுக்கு மனவிருப்பத்தோடு இடம்பெறுகிறது என்பது பல கோடி வினாக்களையும் எழுப்புகின்றன. ஆறு கோடிகளை அறுபது கோடிகளாக்கும் கனவுகள் தேசிய மக்கள் சக்தி அரசில் எட்டாக்கனியாகவே முடியப் போகின்றது. இந்த அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அநேகமான சலுகைகளை நிறுத்தும் நடவடிக்கையில் ஏற்கனவே இறங்கியுள்ளது. அதி சொகுசு வாகன வசதிகள், ஓய்வூதியம் உட்பட நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையின் அதி உயர் ரக உணவு வசதிகள் மற்றும் அமைச்சர்களுக்கான பிரதி அமைச்சர்களுக்கான தங்குமிட வீட்டு வசதிகள் போன்றவற்றிலும் கட்டுப்பாடுகளை கொண்டுவர புதிய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ, பிரதி அமைச்சராகவோ இருந்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கலாம் அல்லது டீல் அரசியல் செய்யலாம் என்று யாராவது கனவு கண்டால் அது அவர்களின் பகல் கனவாகவே முடியப் போகின்றது. அது மட்டுமல்ல அவர்கள் பெற்ற கடன்களை அடைக்க முடியாத அளவுக்கு கடன் சுமை இன்னும் அதிகமாகும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

நாடாளுமன்றம் என்பது எவ்வளவு புனிதமான ஒரு சபை என்பதையும் உச்ச நீதிமன்றத்தையும் தாண்டி அதற்கும் மேலான சட்டமியற்றும் அதிகார மையமே நாடாளுமன்றம்.அவ்வாறான ஸ்தானம் ஒன்றின் மகிமை அறியப்படாமல், மதிக்கப்படாமல், உணரப்படாமல் வியாபார நிலையமாக நினைத்து சிலர் செயற்படுவது வேதனைக்குரியது.

தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு சதமேனும் பணம் கொடுத்தோ பொதிகள் வழங்கியோ, கடன் வாங்கியோ தேர்தல் களம் கண்டு நாடாளுமன்றம் வரவில்லை என்பதை உறுதியாக கூற முடியும். அதற்கான எதுவித ஆதாரங்களும் கிடையாது என்பதே யதார்த்தம். கிழக்கு மாகாணம் இனிவரும் காலங்களிலாவது இந்த விடயத்தை முன்மாதிரியாக கொண்டு தேர்தல்களை சந்திக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.



**தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒரு சதமேனும் பணம் கொடுத்தோ பொதிகள் வழங்கியோ, கடன் வாங்கியோ தேர்தல் களம் கண்டு நாடாளுமன்றம் வரவில்லை**



அது மட்டுமன்றி தேசிய மக்கள் சக்தி இந்த தேர்தலில் பல வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்தியுள்ளமை என்பது நிச்சயமாக தொட்டுக் காட்டப்படல் வேண்டும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திசாநாயக்க பெற்ற மொத்த வாக்குகள் 5740179 . இது 42% ஆகும். பொது தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 6863186 மொத்த வாக்குகளை பெற்றுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாடு முழுவதும் 79 வீதத்தில் அளிக்கப்பட்ட வாக்களிப்பு பொதுத்தேர்தலில் 68.93 வீதமாக குறைவடைந்துள்ளது. மக்களின் வாக்களிப்பில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெற்றது 44 லட்சம் வாக்குகள் ஆகும்.

இம்முறை அதைவிடவும் 19 லட்சம் வாக்குகள் குறைவாகவே அந்த கூட்டணிக்கு கிடைத்திருக்கின்றது. இது அந்த கட்சியின் ஆதரவுத்தளத்தில் உள்ள பெரும் வீழ்ச்சியாகும். கடந்த 2020 தேர்தலில் 54 உறுப்பினர்களாக இருந்த அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்த தேர்தலில் 40 ஆக குறைந்திருக்கின்றது. ஆட்சி அமைக்க முடியாத அணிக்கு வாக்களிப்பதால் பயன் ஏதும் இல்லை என்று மக்கள் கருதி இருக்கலாம். அதனால் அக்கட்சி ஆதரவாளர்களே வாக்களிக்காமல் தவிர்த்திருக்கலாம்.

கம்பஹா மாவட்டத்தில் விஜித ஹேரத் 716715 விருப்பு வாக்குகளை பெற்றிருக்கின்றார். இதுவே இந்த நாட்டில் இதுவரை அளிக்கப்பட்ட அதிகூடிய விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை ஆகும். அவ்வாறுதான் கொழும்பு மாவட்டத்தில் ஹரிணி அமரசூரிய 6,55,289 வாக்குகளை பெற்றிருப்பது இம் மாவட்டத்தில் இது கால வரை பெறப்பட்ட அதிகூடிய விருப்பு வாக்குகள் ஆகும். 2015 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்தில் 500566 அதி கூடிய வாக்குகளை பெற்று இலங்கையில் சாதனை ஒன்றை படைத்திருந்தார். அந்த சாதனை இம்முறை ஹரினியினால் முறியடிக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாகும்.

தேசிய மக்கள் சக்தியின் மேலும் முப்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை விருப்பத் தெரிவாக நாடு முழுவதும் பெற்றிருக்கின்றார்கள் என்பது இன்னும் ஒரு விசேட அம்சமாகும்.

இருந்த போதிலும் இன்று அமைக்கப்பட்டுள்ள 21 பேர் கொண்ட புதிய அமைச்சரவையில் 19 சிங்கள அமைச்சர்களும் இரண்டு தமிழ் அமைச்சர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவைகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போன முதலாவது அமைச்சரவை எனும் நாமத்தை தேசிய மக்கள் சக்தியின் இந்த புதிய அமைச்சரவை பெற்றுக் கொள்கின்றது.

இலங்கையின் முதலாவது அமைச்சரவை தேசபிதா டி.எஸ் சேனநாயக்க தலைமையில் 1947 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் நாள் அமைக்கப்பட்ட போது அதில் ரீ. பீ. ஜாயா தொழில் மற்றும் சமூக சேவை அமைச்சராகவும், ஜீ .ஜீ.பொன்னம்பலம் தொழில்துறை மற்றும் மீன் பிடித்துறை அமைச்சராகவும் சீ. சுந்தரலிங்கம் வர்த்தக, வாணிப அமைச்சராகவும் பதவியில் இருந்ததை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சகல அமைச்சரவைகளிலு ம் சிறுபான்மை முஸ்லிம், தமிழ் அமைச்சர்களின் பங்களிப்பு இருந்து வந்ததை நாம் அறிவோம். அமைச்சரவையில் முஸ்லிம் இனம் சார்ந்த ஒருவர் இருப்பது அந்த சமூகம் சார்ந்த நன்மைகளுடன் தொடர்புடைய விவகாரங்களில் ஒன்று என எடுத்துக்கொள்வதிலும் பார்க்க தேசத்தின் நன்மைக்கே முதலிடம் என்று நோக்கும் போது இனரீதியான சிந்தனைகள் தோன்றுவதற்கு நியாயமே இல்லை.

“கிளீன் நாடாளுமன்றம்” மூலம் நாடு செழித்து வளமான பாதையில் பயணிக்கும் என்றால் அதுவே நாட்டு மக்கள் அனைவருக்கும் பெரும் திருப்தி தரும் ஒன்றாகும்.....

# விடத்தல்தீவு இராணுவ பயிற்சி முகாமில் தொற்றுப்பரவல்: சமூக ஊடகங்களில் பகிரப்படும் செய்திகள் உண்மையா?

(எஸ்.டொரின்)

மன்னார் விடத்தல்தீவு இலங்கை இராணுவ ஆட்சேர்ப்பு பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வரும் பயிற்சிப் படையினருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதன் காரணமாக பயிற்சி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் முகாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி முதல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஆட்சேர்ப்பு சிப்பாய்களுக்கு காய்ச்சல் அறிகுறி காரணமாக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் தற்போது 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் உத்தியோபூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அவர்களில் ஒருவர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமையால், அவர் மேலதிக சிகிச்சைக்காக கொட்டிகாவத்த தேசிய தொற்று நோய்த் தடுப்பு நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், காய்ச்சல் பரவுவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்ட நிலையில், வைத்தியர் ஒருவரினால் வெளியிடப்பட்ட தகவல்கள் என போலியான செய்திகள் இணையத்தில் உலா வருவதையும் காணக்கூடியதாக இருந்தது.

இதனடிப்படையில், இலங்கையின் பிரபல தொலைக்காட்சி ஒன்றிலும் இது தொடர்பாக தவறான செய்தி வெளியாகியிருந்தது. தொடர்ந்து அவை சமூக வலைத்தளங்களிலும் அதிகமாக பகிரப்பட்டும் வருகின்றது.

இது தற்போது, பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதனால் இது தொடர்பிலான உண்மைதன்மையை கண்டறிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளரான மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவிக்கையில்,

ஆரம்பத்தில் நாம் இந்த நோய்த் தொற்று பற்றி கூறிய விடயங்கள் உண்மைதான். ஒருவர் மட்டும் மெனிங்கோகோல் பக்டீரியா தொற்று காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் தற்போது, தேசிய தொற்றுநோய் தடுப்பு நிறுவனத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும், ஆபத்தான நிலையில் உள்ள இரண்டு வீரர்களும் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோய் பரவல் நிலை காரணமாக முகாமில் பயிற்சிகள் நிறுத்தப்பட்டு ஏனைய இராணுவத்தினர் வைத்தியரின் சிபாரிசுக்கு அமைவாக முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் இந்த காய்ச்சல் பரவுவது வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேலும், இராணுவ வீரர்கள் தங்கியிருந்த முகாமும் தற்போது முழுமையாக மூடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் தெரிவிக்கையில்,

மன்னார் விடத்தல்தீவு இராணுவ முகாமிலிருந்து காய்ச்சலொன்று பதிவாகியுள்ளதுடன் ஆரம்பத்தில் 7 இராணுவத்தினர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர்.இதனால், முகாமில் பயிற்சி நிறுத்தப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், மீண்டும் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் படையினர் மத்தியில் மீண்டும் காய்ச்சல் பரவியுள்ளது என மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்த தொற்று நிலைமை தொடர்பில் தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் வைத்தியர் அருண சந்தநாயக்க சில விடயங்களை முன்வைத்ததாகவும் சகோதர மொழி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில்,





இது கொவிட்-19 போன்றதொரு நிலைமையல்ல என்பதால் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் எனவும் தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்தின் வைத்தியர் அருண சந்தநாயக்க தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியது.

மேலும், இது ஒரு பக்டீரியா தொற்று என்றும், பக்டீரியா தொற்றினால் ஏற்படும் அறிகுறிகள் பொதுவானது என அவர் தெரிவித்தாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முகாமின் நிலைமை குறித்து தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்தை மேற்கோள் காட்டி, மெனிங்கோகோகல் பாக்டீரியாவால் ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. மன்னார், விடத்தல்தீவு இராணுவ முகாமில் காய்ச்சல் பரவியதையடுத்து படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது பக்டீரியா நோயினால் ஏற்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை, இந்த காய்ச்சல் பொதுமக்களிடையே பரவவில்லை என்றும், இது கொவிட்-19 போன்ற வைரஸ் நிலை அல்ல என்பதால், தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தத் தேவையில்லை என்றும் மருத்துவ அதிகாரிகள் மற்றும் இராணுவ ஊடகப்பேச்சாளர் உறுதி செய்துள்ளனர்.

ஆகவே, பொதுமக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் சமூக ஊடகங்களில் தவறான வழிநடத்தல் கொண்ட செய்திகளை பகிரவேண்டாம் எனவும் இராணுவ ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

## மீண்டும் பணியை தொடங்கினார் மகிந்த சிறிவர்தன



நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட கே. எம். மகிந்த சிறிவர்தன நேற்று (20) மீண்டும் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கும், இந்நாட்டில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் வெற்றிக்கும் அவர் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார். அமெரிக்காவின் வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பொருளாதார அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமாவையும், களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிறிவர்தன ஒரு சிரேஷ்ட அதிகாரியாவார், அவர் மேக்ரோ பொருளாதார மேலாண்மை, பாரிய பொருளாதார முன்கணிப்பு, நாணயக் கொள்கை, மத்திய வங்கி, பொது நிதி மேலாண்மை, பொதுக் கடன் மேலாண்மை மற்றும் நிதி நிரலாக்கம் மற்றும் கொள்கை ஆகிய துறைகளில் பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள் மற்றும் நிதி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகை சிகரெட்டுக்கள் மீட்பு

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 42 இலட்ச ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம்(19) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பெரியமுல்லையைச் சேர்ந்த 41 நபர் ஒருவரும் கொழும்பு 12ஐ சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கொழும்பு மிரானியா தெருவிலும் சாண்டர்ஸ் வீதியிலும் சோதனைகள் முன்னெடுக்கப்பட்ட போது இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 52,800 மான்செஸ்டர் சிகரெட்டுக்கள் மற்றும் ரொக்கமாக 24,200 ரூபா பணம், 03 கையடக்க



தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள் என்பவையும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் 50 இலட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கெசல்வத்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## நானுஓயா பொலிஸ் நிலையத்தில் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு திறப்பு



(செ.திவாகரன். டி.சந்ரு)

நானுஓயா பொலிஸ் நிலையத்தில் நேற்று புதன்கிழமை (20) காலை

மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் , உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதற்கென விசேடமாக பொலிஸ் நிலையத்தில் தனியான அறை ஒன்று ஒதுக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் பீ.என் ஏக்கநாயக்க மற்றும் நானுஓயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் குறித்த மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் திறந்து வைக்கப்பட்டது.

## ஆவணங்களற்ற மற்றுமொரு வாகனம் கண்டியில் பறிமுதல்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி, கெங்கல்ல பிரதேசத்தில் உள்ள வாகனத் தளமொன்றில் (யாட்) இருந்த கெப் வண்டி தொடர்பான ஆவணங்களை முன்வைக்க முடியாத காரணத்தினால், தெல்தெனிய பொலிஸார் நேற்று முன்தினம் (19) குறித்த கெப் வண்டியை பறிமுதல் செய்துள்ளனர்.

கண்டி மற்றும் கண்டியை அண்மித்துள்ள பகுதிகளில் அண்மைக்காலமாக இவ்வாறு பல பதிவு செய்யப்படாமல் சட்ட விரோதமாக பாவிக்கப்பட்ட வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர். சில வருடங்களுக்கு முன்னர் தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது எனக் கூறப்படும் இந்த வாகன தளத்தில் அடகு வைக்கப்பட்ட வாகனங்கள் பல இருப்பதும் தெரியவந்துள்ளது. தெல்தெனிய பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதற்கும் மேலாக கால்தன்ன ஆலய மதபோதகருக்கு சொந்தமான இரண்டு ஜீப் வண்டிகளையும் இந்தப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இந்த வாகனங்கள் போலியாகப் பதிவு செய்யப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் சந்தேகத்தின் பேரில் போதகரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்தினர்.

## கண்டியில் தமிழர்,முஸ்லிம்களின் வாக்குகளுக்கு நடந்தது என்ன?

### மலையக ஆய்வு மையம் ஆராய முடிவு

(கண்டி நிருபர்)

மலையக ஆய்வு மையம் அண்மையில் நடந்த பொதுத் தேர்தல் தொடர்பாக ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளவுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 110,000இற்கும் மேல் தமிழ் வாக்காளர்களும் 200,000 முஸ்லீம் வாக்காளர்கள் இருந்தும் இவ்வாக்குகள் பற்றிய போதிய தரவுகள் இல்லாததாலேயே இந்த ஆய்வினை தொடங்கவுள்ளனர்.

கண்டியில் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர் கலாநிதி பி.பி சிவப்பிரகாசம் 28,089 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் பாரத் அருள்சாமி 18,880 வாக்குகளையும், புதிய ஜனநாயக கட்சி வேட்பாளர் வேலு குமார் 7,539 வாக்குகளையும், இ.தொ. கா. சார்பில் புதிய ஜனநாயக கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர் பி.பிரசாத் 3,109 வாக்குகளையும் மட்டுமே பெற்றுள்ளனர் . இதன் கூட்டுத் தொகை கிட்டத்தட்ட 50,000 வரையிலேயே உள்ளது. எனவே,ஏனைய தமிழர் வாக்குகள் தொடர்பாகவும் மக்கள் தேசிய முன்னணி முஸ்லிம் வேட்பாளரான ரியாஸ் பாருக் 64,043 வாக்குகளையும், மொகமட் பஸ்தின் 57,716 வாக்குகளும், ஐ.ம.ச வேட்பாளர் ரவூப் ஹக்கீம் 30,883 வாக்குகளைப் பெற்ற நிலையில் ஒரு இலட்சம் வாக்குகள் போக ஏனைய முஸ்லிம் வாக்குகள் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இவ் ஆய்வு மையத்தின் முதன்மை ஆய்வாளர், முன்னாள் அரசியல் துறை விரிவுரையாளர் இரா. நித்தியானந்தன் தெரிவித்தார்.







பஸ்னாகொட விமலரதன நாஹிமியின் 20வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இரத்தினபுரி /ஹனுவல கிராமத்தில் நிறுவப்பட்ட போதிமலு விகாரை நேற்று முன்தினம்(19) கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

## நீலக் கொடி கடற்கரை திட்டம்

# அறுகம்பே, பாசிக்குடா கடற்கரைகள் தெரிவு





(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

பாசிக்குடா "புளூ பிளக் பீச்" நீலக் கொடி கடற்கரை வேலைத் திட்டம் தொடர்பான முகாமைத்துவ கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜு/லேக்கா தலைமையில் கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் துறைசார்ந்த அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பழைய மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. பாசிக்குடாக் கடற்கரையை "புளூ பிளேக் பீச் (Blue Flag Beach)" ஆகத் தரமுயர்த்தும் வேலைத் திட்டம் தொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சின் அனுசரணையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்திற்காக கிழக்கு மாகாணத்தில் அறுகம்பே கடற்கரையும் பாசிக்குடா கடற்கரையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் கடல் சூழல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் (Marine Environment Protection Authority) மாவட்ட அதிகாரி ஆசிபா அப்துல் றசூல் பாசிக்குடாக் கடற்கரையை இவ்வாறு "புளூ பிளக் பீச் (Blue Flag Beach)" ஆக தரமுயர்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினார்.

"புளூ பிளேக் பீச் (Blue Flag Beach) தரச் சான்றிதழ் டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள சுற்றாடல் கல்விக்கான மன்றம் (FEE) எனும் சர்வதேச நிறுவனத்தினால் சுற்றாடல் கல்வி மற்றும் தகவல், தரமான நீர், சுற்றாடல் முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் சேவை ஆகிய பிரதான நான்கு காரணிகளுடன் காணப்படும் கடற்கரைகளுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்காக 33 அளவுகோல்கள் உள்ளன. இதில் 23 அளவுகோல்கள் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.கடற்கரையில் தகவல் நிலையம் அமைத்தல், கடற்கரைப் பயனாளிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல், கடற்கரை நீரின் தரம் தொடர்பாக டிஜிட்டல் அறிவித்தல் பலகை அமைத்தல், மலசல கூடம் அமைத்தல், ஆடை மாற்றும் பகுதியை புனர்நிர்மாணம் செய்தல், உடைமைகளை பாதுகாக்க பாதுகாப்புப் பெட்டகம் அமைத்தல், கழிவகற்றல் சேவைகளை பராமரித்தலும் தரமானதாகப் பேணுதலும் மற்றும் மீள்சுழற்சிக் கழிவுகளை சேகரித்தலும் அதனை ஒப்படைத்தலும், போன்ற செயற்பாடுகளை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கல்குடா பிரதேச சபை ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கடல் சூழல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் கிழக்கு பிராந்திய உதவி முகாமையாளர் ரீ. ஸ்ரீபதி, சுற்றுலாத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமைக் காரியாலய அதிகாரிகள், மாவட்டச் செயலக பிரதேச செயலக திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலை

பிரபல பாதாள உலகத் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகாவான தமிழ் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று (20) முற்படுத்தப்பட்டார். இதன்போது நீதிமன்ற வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் விசேட பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த வடமராட்சியை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார். மே 31 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் அந்நபர் முற்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த சந்தேக நபர், தான் பாதாள உலகக் குழுவின் தலைவன் கஞ்சிப்பானை இம்ரானின் முன்னாள் சகா எனவும், அவருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து பூக்குடி கண்ணா என்பவருடன் இணைந்து செயற்பட்டு வந்ததாகவும், கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகி இருந்ததாகவும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்குறித்த சம்பவங்களின் பின்னணியில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்ததை அடுத்து விசேட அதிரடிப்படையினர், பொலிசார் இணைந்து பலத்த பாதுகாப்புடன் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு நேற்று பகல் 12 மணியளவில் அழைத்து வரப்பட்டிருந்தார்.

## மனைவிக்கு மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த கணவன்

மனைவிக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகம் கொண்ட கணவன், இரண்டு பிள்ளைகளின் தாயின் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான இரண்டு பிள்ளைகளின் தாய், சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் செவ்வாய்க்கிழமை (19) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புத்தளம் திலடியா பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மனைவி எரிந்துகொண்டிருந்த போது அதனை அணைக்கச் சென்ற கணவனுக்கும் சிறு தீக்காயங்கள் ஏற்பட்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு பிள்ளைகளின் தாயான இவர், கணவன் உடலுக்கு தீ வைத்ததையடுத்து, அயலவர்கள் அவரது உடலை எரித்ததையடுத்து, உடனடியாக அவரை புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கட்சிகளின் உள்விவகாரங்களில் தேர்தல் ஆணைக்குழு தலையிடாது

அரசியல் கட்சிகளின் உள்விவகாரங்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எந்தத் தொடர்பும் இல்லையெனத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ.எல். ரத்நாயக்க, புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்கவின் பெயரைக் குறிப்பிட்டு வெளியான வர்த்தமானி அறிவித்தலை இரத்துசெய்ய முடியாதெனவும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்கவை நியமித்தமை தொடர்பான சர்ச்சைகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அப்பாற்பட்டது. கட்சியின் உள்விவகாரங்களில் எங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. கட்சியின் செயலாளரால் தேசியப் பட்டியல் உறுப்பினராக ரவி கருணாநாயக்கவின் பெயரைக் குறிப்பிட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டு தேர்தல் ஆணைக்குழு தனது கடமையை நிறைவேற்றியுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்ய முடியாது எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ரவி கருணாநாயக்கவை தேசியப் பட்டியலில் எம்.பி.யாக நியமிப்பது குறித்து தேசிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் ஷியாமலா பெரேரா எழுத்து மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார். எனினும், இந்த நியமனம் தன்னிச்சையாக எடுக்கப்பட்டதாக குழப்பநிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயம்

## நீர்க் கட்டணம் நிலுவையில் உள்ளோர் உடன் செலுத்துமாறு வேண்டுகோள்

(றிஸ்வான் சாலிஹூ)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயம் அதன் எல்லைக்குட்பட்ட பொத்துவில் தொடக்கம் மருதமுனை வரையான பிரதேசங்களில் நீர்க்கட்டணப் பட்டியலுக்கான நிலுவைகளை இதுவரை செலுத்தாமல் அதிகமானோர் இருப்பதனால் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நிதி சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஐ.எல். ஹைதர் அலி தெரிவித்தார்.

இந்நிலையில், அவ்வாறு பணம் செலுத்தாதவர்கள் அதனை முழுமையாக செலுத்துமாறும், அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நீரிணைப்புக்களை துண்டிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

ஆகவே, நீர்ப்பட்டியல் நிலுவையுள்ளவர்கள் அதனை உடனடியாக முழுமையாக செலுத்தி நீர்த்துண்டிப்பிலிருந்தும் ஏனைய அசௌகரிகங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வதோடு, எதிர்காலத்தில் மாதாந்தம் கிடைக்கப் பெறும் தங்களது நீர்ப்பாவனைக்கான நீர்க்கட்டணங்களை உடனுக்குடன் செலுத்துமாறும் நீர்ப்பாவனையாளர்களை பிராந்திய முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## செயல் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு



(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் அக்ஷன் யுனிடி லங்கா (AULANKA) நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயல் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டமொன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் புதிய மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அக்ஷன் யுனிடி லங்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜீ.சுரேஸ் மற்றும் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஜீ.பிரணவன், பிரதேச செயலாளர்களான நமசிவாயம் சத்தியானந்தி, காசு சித்திரவேல், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சுபா சுதாகரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் நவநீதன், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் வீ.முரளிதரன், பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

மாவட்ட செயலக சிறுவர் உரிமை மேம்பாடு உத்தியோகத்தர், பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி பணியகத்தின் உத்தியோகத்தர், அக்ஷன் யுனிடி லங்கா நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நுகர்வோர் அதிகார சபையினால் விசேட வேலைத்திட்டம்

පාරිභෝගික කටයුතු පිළිබඳ අධිකාරිය
பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
CONSUMER AFFAIRS AUTHORITY

(காத்தான்குடி நிருபர்)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த விசேட வேலைத்திட்டம் 2025 ஜனவரி 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

பண்டிகை காலத்தினுள், நுகர்வோர் எதிர்நோக்குகின்ற அசௌகரியங்கள் தொடர்பாக 1977 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்து தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## கிழக்கில் பணிப்பாளர் பதவிகள் வெற்றிடம்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான சுஜாதா குலேந்திரகுமார், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு, (புீழவைெநன யள யுனைட. ஊழஅஅளைளழைநெச புநநெசயட ழகீரடிடஉைவழைளை ஆழுறு) தனது கடமையை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் புதனன்று 20.11.2024 பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனால் மட்டக்களப்பு வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும், கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் ஏற்பட்டுள்ளது.

புதிய அரசு, இவ்விரு பதவி வெற்றிடங்களையும் நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வியாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

## சிறுநீரகம் தேவை

பிரான்ஸ் நாட்டில் வாழும் வடமராட்சி பருத்தித்துறையை சேர்ந்த 32 வயதான இளைஞனுக்கு" ஓ பொசிற்றிவ்" (0+) வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகிறது.

தானம் செய்யவிரும்புபவர்கள் 074 069 6890 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## இவரைக்காண உதவுங்கள்




(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டக்களப்பு நகர் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய சுந்தரலிங்கம் சுகந்தினி எனும் குடும்ப பெண்னை கடந்த இரு மாதங்களிற்கு மேலாக காணவில்லையென மட்டக்களப்பு தலைமையக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த பெண் கடந்த 16.09.2024 ஆம் திகதி காலை வீட்டில் இருந்து சென்றுள்ள நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லையென உறவினர்கள் தெரிவிக்கும் நிலையில் இவரை கண்டுபிடிக்க உதவுமாறு கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இவரை காண்பவர்கள் அல்லது அடைக்கலம் கொடுத்திருப்பவர்கள் யாரேனும் இருந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது 074 304 8523 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தெரிவிக்குமாறு உறவினர்கள் கேரிக்கை விடுக்கின்றனர்.

# பத்தாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு ஒத்திகை




பத்தாவது நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வு இன்று (21)காலை 10 மணிக்கு ஆரம்பமாகஉள்ளது.இதன் ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வை வரவேற்பதற்கான ஒத்திகை நேற்று (20) இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட பங்கள்.

## இலங்கை மெதடிஸ்த திரு அவை குருத்துவ அருட்பொழிவு

(கு.குணறுபேஸ்)

இலங்கை மெதடிஸ்த திருஅவையின் குரு அருட்பொழிவு நிகழ்வானது மட்டக்களப்பு கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இவ் அருட்பொழிவு வழிபாட்டில், அருட்பணியாளர்களான திரேசா சம்பத், டொனேற்றா மைக்கல், கந்தசாமி அருளன், சாந்த ரோசா ஆகியோர் அருட்பொழிவு பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருஅவையின் திருப்பேரவைத் தலைவர், அருட்திரு. கிங்ஸ்லி வீரசிங்க, திருப்பேரவையின் செயலாளர், அருட்திரு. லெஸ்லி தர்யூ, திருப்பேரவையின் உப தலைவர், திரு. டென்னீஸ் தவராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வதுடன், மெதடிஸ்த திருஅவையின் வடக்குக் கிழக்குத் திருமாவட்ட அவையின் தலைவர், அருட்திரு. சாமுவேல் சுபேந்திரன் அவர்களும், மத்திய திருமாவட்ட அவையின் தலைவர், அருட்திரு. க. கருணசேகரா அவர்களும், தென்பகுதிக்கான திருமாவட்ட அவைத் தலைவர், சுமித் வீரமுண்ட அவர்களும் கலந்துகொண்டு குருத்துவ அருட்பொழிவைச் சிறப்பிக்கவுள்ளனர்.

## இளம் தாய் சிந்துஜா மரணத்தில் சந்தேகம் 3 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கட்டையடம்பன் இளம் தாய் சிந்துஜா தொடர்பான வழக்கு மேலதிக விசாரணைக்காக டிசம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு தவணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கட்டையடம்பன் பகுதியை சேர்ந்த இளம் தாய் சிந்துஜா மன்னார் வைத்தியசாலையில் மரணமடைந்த நிலையில் குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் மற்றும் பெற்றோர்கள் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தனர். இதன் விசாரணைகள் பொலிஸாரால் இடம்பெற்று வருவதாக நம்பப்பட்டபோதும் இவ்விசாரணைகள் மந்த கதியில் இடம் பெற்றுள்ளமை நீதிமன்ற விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

சிந்துஜாவின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை (19) மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட நிலையில் சில நாட்களுக்கு முன்னரேயே குறித்த வழக்கு மன்னார் பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மன்னார் குற்றத்தடுப்பு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர். இதுவரை காலமும் மன்னார் மடு பொலிஸார் குறித்த வழக்கு விசாரணையை (பி) வழக்காக பதிவு செய்யாது சாதாரண வழக்காக பதிவு செய்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி டெனிஸ்வரன் மற்றும் சர்மிலன் டயசின் கோரிக்கையை ஏற்று குறித்த வழக்கு தொடர்பான விசாரணை யை துரிதப்படுத்தி இரண்டு வார காலத்துக்குள் அறிக்கை சமர்பிக்குமாறும் வழக்கை (பி) அறிக்கையாக தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு உலகின் மிகப்பெரிய விமானம்

கட்டார் எயார்லைன்ஸ்'க்கு சொந்தமான எயார்பஸ் யு380 விமானம் நேற்று முன்தினம் (19) இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இந்த விமானம் உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானங்களில் இதுவும் ஒன்றாகும்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட குறித்த விமானம் எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

## கற்பிட்டியில் இரத்ததான முகாம்

இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் (ஊவது)கற்பிட்டி கிளை 10வது தடவையாக மேற்கொள்ளும் மாபெரும் இரத்த தான முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடைபெற உள்ளது. உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற மேற்படி நிகழ்வில் சகலரும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி நிகழ்வு வெற்றி பெற உதவுமாறு ஏற்பாட்டு குழு வேண்டிக் கொள்கின்றது.

## சுகாதார அமைச்சர் நளிந்தவுக்கு ரிஷாத் பதியுதீன் கடிதம்

மன்னார் பொது வைத்தியசாலையில்தாய், சேய் உயிரிழந்தமை தொடர்பில் பகிரங்கமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வன்னி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில்மரணமடைந்த இளம் தாய், சேய் மரணங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டியே இந்தக் கடிதத்தை அவர் அனுப்பியுள்ளார்.

குறித்த தாய் மூச்சுத்திணறல் உட்பட்ட சில உபாதைக்குள்ளாமை தொடர்பில் அவரது உறவினர்கள அங்கு கடமையிலிருந்தவர்களுக்குச் சுட்டிக்காட்டியும் அவற்றைப் புறந்தள்ளி சாதாரண மகப்பேற்றுப் பிரிவில் அனுமதித்துள்ளனர். இதன்போது அந்த தாய் மிகவும் கஷ்டமான நிலையிலேயே காணப்பட்டுள்ளார். இது



தொடர்பில் மீண்டும் அவரது உறவினர்கள் வைத்தியர்கள், தாதியர்களிடம் சுட்டிக்காட்டியும் அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை எனவும் இதன் காரணமாகவே தாயின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் அனைத்து வசதிகள் இருந்தும் அசட்டைப்போக்குக் காரணமாகவே இந்த மரணம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த பெண்ணின் சிசுவும் உயிரிழந்தமையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த நிலையில், உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்து மகப்பேற்று விடுதி பகுதியில் போராட்டம் நடத்தியதால் அங்கு பதட்டமான நிலையும் ஏற்பட்டிருந்தது.



இதனைத் தொடர்ந்து அங்கு சென்ற மன்னார் நீதிவான் இருவரது சடலங்களையும் பிரதே பரிசோதனைக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இருவரது மரணங்கள் தொடர்பில் மக்கள் மத்தியிலும் பலத்த சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதுடன் மன்னார் பொது வைத்தியசாலை மீதான நம்பிக்கையையும் மக்கள் இழக்கும் நிலைமை உருவாகியுள்ளது.




# தி.மு.கவின் உயர்நிலை செயல் கூட்டமும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அக் கட்சியின் உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில், "தமிழ் உட்பட மாநில மொழிகளைப் பின்னுக்குத் தள்ளி ஹிந்தி மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கும் சட்டங்கள் கொண்டு வருவதற்கு மத்திய அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

ரயில் விபத்துக்களை தடுக்க நடவடிக்கை எடுக்காதது, மாநில அரசுக்கான நிதியை விடுவிக்காமை உள்ளிட்ட பல விவகாரங்களில் ஒன்றிய பாஜக அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்துக்கும் வரி பகிர்வதில் பாரபட்சம் காட்டுவதற்கும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 18 மாதங்களாக மணிப்பூரில் நடக்கும் கலவரத்துக்கு பிரதமர் மோடி அமைதி காப்பது என்பது அம் மாநிலத்தை மத்திய அரசு கை விட்டதாகவே தெரிகிறது.

எனவே இவ் விடயம் தொடர் பில் பிரதமர் மோடி தனிக்கவனம் செலு த்தக் கோரிகை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. மேலும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்குத் தயாராகும் வகையில் பரப்புரையை இப்போதே ஆரம்பியுங்கள் எனவும் தி.மு.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

## கரையோரங்களில் பயங்கரவாத ஊடுருவலை தடுக்க ஒத்திகை



தமிழ்நாட்டின் கடலோர கிராமப் பகுதியில் நேற்றும் இன்றும் கடல் வழி சோதனை மற்றும் கடற்படையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

sea VIGIL எனப்படும் இந்த ஒத்திகையானது, கடல் வழியாக பயங்கரவாதிகளின் ஊடுருவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படு கின்றன.

ஒத்திகையின் முதல் நாளான நேற்று புதன்கிழமை செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், கல்பாக்கம் ஆகிய இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

## கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கு

இந்தியாவின் கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் பகுதியில் கடந்த ஜுன் மாதம் கள்ளச் சாராயம் குடித்த 67 பேர் உயிரிழந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில்



இதுவரையில் 20 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை கடந்த செப்டெம்பர் மாதம் நடந்து முடிந்தது. ஆனால், தீர்ப்பு வழங்கப்படவில்லை. இந்நிலையில் இவ் வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று புதன்கிழமை வழங்கியது.


அதில் "கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய வழக்கை மத்திய புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றம் செய்து உத்தரவிட்டப்பட்டுள்ளதோடு, இதில் எதுவித குறுக்கீடும் இருக்கக்கூடாது.

இவ் வழக்கை மத்திய புலனாய்வுப் பிரிவு தீவிரமாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் விசாரணைக்காக மாநில பொலி ஸார் தங்களிடம் உள்ள ஆவணங்களை மத்திய புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும்" எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மத்திய புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு எதுவித காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நான்கு வயது சிறுமி மாரடைப்பால் மரணம்

இந்தியாவின் தெலுங்கானா மாநிலம், கம்மம் மாவட்டம், எம். வி.பாளையம் கிராமத்தைச் சேர்ந்த




வினோத் – லாவண்யா தம்பதியின் மகள் பிரஹர்ஷிகா.

நான்கு வயதான இவர் வெளியில் சென்ற தாய் வீட்டுக்கு வந்ததைக் கண்ட மகிழ்ச்சியில் அம்மா என அழைத்தவாறு அவரை நோக்கி ஓடிச் சென்றுள்ளார்.

அப்போது வழியிலேயே வீட்டின் வாசற்படியில் குறித்த சிறுமி திடீரென சரிந்து விழுந்துள்ளார்.

மகளை ஓடிச் சென்று தூக்கியபோது, தாயிடம் தனக்கு நெஞ்சு வலிப்பதாக சிறுமி கூறியுள்ளார். இதையடுத்து, உடனே சிறுமியை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கொண்டு சென்றபோது அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுமி ஏற்கனவே மாரடைப்பால் இறந்துவிட்டதாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

# இடைவெளி அதிகமாகிவிட்டது ரஹ்மான் - பானு விவாகரத்து



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் – சாய்ரா பானு தம்பதி விவாகரத்து செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விவாகரத்து தொடர்பில் தனித்தனியாக அறிவிப்பு வெளியானது.

அதன்படி, நேற்று புதன்கிழமை சாய்ரா பானு தரப்பு வழக்கறிஞரின் அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகியது.

குறித்த அறிக்கையில், "பல ஆண்டுகால திருமண வாழ்க்கையையடுத்து, தனது கணவர் ரஹ்மானிடமிருந்து பிரிவது எனும் கடினமான முடிவை எடுத்துள்ளார்.

இருவருக்கும் ஏற்பட்ட உணர்வுப்பூர்வ வேறுபாட்டின் காரணமாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இருவருக்குள்ளும் இருந்த அதீத காதலையும் தாண்டி ஏற்பட்ட பதற்றம் மற்றும் சிரமங்கள் இருவருக்குள்ளும் இடைவெளியை ஏற்படுத்திவிட்டது.

மிகுந்த மன வலியுடனேயே சாய்ரா பானு இம் முடிவை எடுத்திருக்கிறார்.

இத் தருணத்தில் அவரவரின் தனிப்பட்ட விருப்பங்களை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என அதில் கூறப்பட்டுள்ளது.

ரஹ்மான் தரப்பில், "எங்கள் திருமண வாழ்வின் மிகச் சிறப்பான 30 வருடங்களை நிறைவு செய்வோம் என எதிர்பார்த்தோம். ஆனால், அவை எதிர்பாராத முடிவுகளை எட்டிவிட்டது. உடைந்துபோன இதயங்களினால் கடவுளின் சிம்மாசனம் கூட நடுங்கும். அதுபோல உடைந்தவை ஒருபோதும் மீண்டும் சேராது. இந்த இக்கட்டான வேளையில் உங்கள் அன்புக்கு நன்றி" எனக் கூறியுள்ளார்.

## திருமணத்தை மறுத்த ஆசிரியை கொலை

இந்தியாவின் தஞ்சை மாவட்டம், மல்லிப்பட்டினம் அரசப் பாடசாலையில் பாடம் கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியை கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் குறித்த பாடசாலையில் ஆசிரியராக இணைந்துகொண்டார் ரமணி.

இவ்வாறிருக்க சின்னமனை பகுதியைச் சேர்ந்த மதன் என்பவருக்கு ரமணியை பெண் கேட்டுச் சென்றுள்ளனர்.

ஆனால், ரமணிக்கு இதில் விருப்பமில்லை என கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மதன் நேற்று புதன்கிழமை காலை ரமணியின் வகுப்புக்கு சென்று அவரது கழுத்துப் பகுதியில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதில் ரமணி மயங்கி கீழே விழுந்துள்ளார்.

உடனே சக ஆசிரியர்கள் ரமணியை மீட்டு பட்டுக்கோட்டை அரச மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே ரமணி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்த பொலிஸார் மதனை கைது செய்துள்ளனர்.

## கஸ்தூரிக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்



நடிகை கஸ்தூரி தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசிய குற்றத்தின் பெயரில் அவருக்கு எதிராக சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல இடங்களிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அதன்பெயரில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதனைத்தொடர்ந்து முன் பிணை கோரி மதுரை மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் கஸ்தூரி.

ஆனால், அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

அவரது முன் பிணை தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் தலைமறைவானார்.

தலைமறைவாகிய கஸ்தூரியை தேடிப் பிடித்த தனிப்படை பொலிஸார் கைது செய்தனர்.

அதன்பின்னர் எழும்பூர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நடிகை கஸ்தூரி புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் ஆட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தையின் தாய் என்பதை முன்னிறுத்தி தனக்கு பிணை வழங்க வேண்டும் என நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இதையடுத்து, மனுவை விசாரிக்கும் பொலிஸார் சார்பில் எதுவித தடையும் இல்லை என தெரிவித்ததால் கஸ்தூ ரிக்கு பிணை வழங்கி சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 56 வருடங்களின் பின் கயானா சென்றார் மோடி

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, நைஜீரியா, பிரேசில், கயானா ஆகிய நாடுகளுக்கு ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். நைஜீரிய ஜனாதிபதி போலா அகமது தினுபுவின் அழைப்பின் பேரில் மோடி அந்நாட்டுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டிருந்தார்.

சுமார் 17 வருடங்களுக்குப் பின்னர் நைஜீரியா சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையும் மோடிக்கு கிடைத்தது.

நைஜீரியா பயணத்தை முடித்துக்கொண்டு அப்படியே பிரேசிலில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.

இம் மாநாட்டில் நீடித்த வளர்ச்சி, பொருளாதாரம் உள்ளிட்ட சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பது குறித்து மோடி எடுத்துரைத்திருந்தார்.

இதனையடுத்து அந்நாட்டு ஜனாதிபதி போலா அகமது தினுபுவை சந்தித்து இருதரப்பு உறவையும் பலப்படுத்துதல் குறித்தும் கலந்துரையாடினார்.

இவற்றையெல்லாம் முடித்து, நேற்று புதன்கிழமை மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றான கயானாவுக்கு மோடி பயணம் செய்துள்ளார். அங்கு சென்ற மோடிக்கு அந் நாட்டின் சம்பிரதாயப்படி வரவேற்பும் மரியாதையும் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 56 வருடங்களுக்குப் பின்னர் கயானா சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையும் மோடி வசம் சென்றமை குறிப்பிடத்தக்கது.








# உக்ரைனில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்பட்டது


வான்வழி தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்பட்டுள்ளது. தூதரகத்தை மூடுவதாக அமெரிக்கா நேற்று புதன்கிழமை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

தூதரகம் மூடப்பட்டதை உறுதி செய்த அமெரிக்க வெளியுறவுத்துறை, ஊழியர்களை வெளியேறும்படியும் அறிவுறுத்தியது.

இந்நிலையில், கிவில் உள்ள அமெரிக்க குடிமக்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது. அப்பகுதி மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா தயாரித்த நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் உக்ரைன் தாக்குதல் நடத்தியதை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது தொடர்பான தனது கொள்கையை மாற்றப்



போவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முன்னதாக அறிவித்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவில் பதற்றம் அதிகரித்துள்ளன.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக ரஷ்யா புதிய போர் முனையைத் திறக்கலாம் என அமெரிக்க வெளியுறவுத் துறை எச்சரித்ததை அடுத்து ஐரோப்பா மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைனுக்கு கண்ணிவெடிகள்

## அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல்

உக்ரைனுக்கு ஆள் எதிர்ப்பு கண்ணிவெடிகளை வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒப்புக்கொண்டதாக பெயர் குறிப்பிடாத அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

அத்தகைய கண்ணிவெடிகள் விரைவில் உக்ரைனுக்கு வழங்கப்படும் என்றும், அவை உக்ரைனின் பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஜனவரி 20ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதிவியேற்கவுள்ள நிலையில், உக்ரைனின் போர் முயற்சியை வலுப்படுத்தும் முயற்சியாகவும், உக்ரைனின் கிழக்கில் தொடர்ந்து முன்னேறி வரும் ரஷ்ய துருப்புக்களை கட்டுப்படுத்தும் முயற்சியாகவும் இது பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதிகளில் இதுபோன்ற கண்ணிவெடிகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் உக்ரைன் உறுதிபூண்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

ரஷ்யாவின் எல்லையில் அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் ஏவுவதற்கு பைடன் அண்மையில் அனுமதி வழங்கியிருந்தார்.

இதனையடுத்து இரவோடு இரவாக, உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் தத்தமது பிரதேசங்களில் பெரிய ஆளில்லா விமானத் தாக்குதல்களை அறிவித்தன.

2022 பெப்ரவரியில் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து ரஷ்யா கண்ணிவெடிகளை தாராளமாக பயன்படுத்தியுள்ளது.

எனினும், இதுபோன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவது பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற அடிப்படையில் சர்வதேச ஆட்சேபனைகள் பைடன் நிர்வாகத்தை கையொப்பமிடுவதைத் தடுத்தன.

உக்ரைன் குறிப்பிட்ட காலத்திற்கு செயலில் இருக்கும் கண்ணிவெடிகளை மட்டுமே பயன்படுத்துவதாக உறுதியளித்ததாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா வழங்கும்" கண்ணிவெடிகள் ரஷ்யாவின் கண்ணிவெடிகளில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றன, ஏனெனில் அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு செயலிழந்து விடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த கண்ணிவெடிகள் நான்கு மணிநேரம் முதல் இரண்டு வாரங்கள் வரை செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் அருகில் வரும்போது வெடிக்கும் வகையில் இந்த கண்ணிவெடிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த கண்ணிவெடிகள் மின்சாரம் மூலம் இணைக்கப்பட்டவை மற்றும் வெடிக்க மின்கலம் (பெட்டரி) சக்தி தேவைப்படுகிறது. மின்கலத்தின் சக்தி தீர்ந்துவிட்டால், அவை வெடிக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல் முறையாக 94,000 டொலரை கடந்த பிட்காயின் மதிப்பு



உலகின் மிகவும் பிரபலமான கிரிப்டோகரன்சியான பிட்காயின் மதிப்பு இந்த ஆண்டு இருமடங்காக அதிகரித்துள்ளது.

இதன்படி, பிட்காயின் மதிப்பு 94 ஆயிரம் டொலருக்கு மேல் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றதை அடுத்து பிட்காயின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், ட்ரம்ப் நிர்வாகம் கிரிப்டோகரன்சிக்கு ஏற்றதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பிட்காயின் வர்த்தகர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரபலமான கிரிப்டோகரன்சியான பிட்காயின் இந்த ஆண்டு இருமடங்காக அதிகரித்துள்ளது. நேற்று புதன்கிழமை ஆசிய நேரப்படி 92,104 டொலராக இருந்தது.

எனினும், முடிவில் அதன் பெறுமதி 94,078 டொலர் என்ற சாதனையை எட்டியது. கடந்த நவம்பர் ஐந்தாம் திகதி இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு கிரிப்டோகரன்சியின் மதிப்பு உயர்ந்துள்ளது.

இந்நிலையில், உலகளாவிய கிரிப்டோகரன்சி சந்தை மதிப்பு மூன்று டிரில்லியன் டொலருக்கும் அதிகமாக உயர்த்தியுள்ளதாக இதனுடன் தொடர்புடைய தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

# பிரேசில் ஜனாதிபதியை கொலை செய்ய சதி; ஐவர் கைது

ஆட்சி கவிழ்ப்பு சதி, ஜனாதிபதி லூலா டா சில்வா மற்றும் பிறரை கொலைசெய்ய திட்டமிட்டதாக கூறி ஐந்து அதிகாரிகளை பிரேசில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 2022 ஜனாதிபதி தேர்தலில் இனாசியோ லூலா டா சில்வா வெற்றி பெற்று பதவியேற்றார். அப்போது முதல் ஜனாதிபதியை கொலைசெய்வது மற்றும் ஆட்சி கவிழ்ப்பு உள்ளிட்ட சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் நான்கு இராணுவ அதிகாரிகள் மற்றும் ஒரு ஓய்வு



பெற்ற அதிகாரி ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து அந்நாட்டு பொலிஸார் தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்ட ஐந்து பேரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், துணை ஜனாதிபதி ஜெரால்டோ அல்க்மின் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதி அலெக்ஸாண்ட்ரே டி மோரேஸ் ஆகியோரைக் கொல்லவும் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஐந்து பேரில் இராணுவத்தின் சிறப்புப் படையில் பயிற்சி பெற்ற நான்கு இராணுவ வீரர்கள் மற்றும் ஓய்வுபெற்ற உயர் அதிகாரி ஒருவரும் அடங்குவர். இவர்கள் மீது நீண்ட காலமாகவே சந்தேகம் இருந்தது. இந்நிலையில் தற்போது அந்த ஐந்து பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளோம்" என்று தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்: 12 படை வீரர்கள் பலி



பாகிஸ்தானில் பாதுகாப்பு படையினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் பல வீரர்கள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் பக்டுங்க்வா மற்றும் பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக தொடர் பயங்கரவாத தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன.

குறிப்பாக பொலிஸார் மற்றும் இராணுவ வாகனங்களை குறித்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கைபர் பக்டுங்க்வா மாகாணத்தில் செவ்வாய்கிழமை இரவு பாதுகாப்பு படையினரின் சோதனைச் சாவடி மீது பயங்கரவாதிகள் தற்கொலை படை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வெடிகுண்டுகள் நிரப்பிய கார் ஒன்றை மோதச் செய்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசா சென்றார் நெதன்யாகு - பணயக் கைதிகளை மீட்டு தருபவர்களுக்கு வெகுமதி அறிவிப்பு

காசாவை ஹமாஸ் மீண்டும் ஆட்சி செய்யாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காசாவிற்கு விஜயம் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது மீண்டும் ஒருமுறை போர்நிறுத்தம் செய்வதற்கான முயற்சிகளை நிராகரித்தார்.

இந்நிலையில், ஹமாஸ் கடத்திச்சென்ற



பணயக் கைதிகளை கண்டுபிடித்து இஸ்ரேலிடம் ஒப்படைப்பவர்களுக்கு ஒவ்வொரு பணய கைதிக்கும் தலா ஐந்து மில்லியன் டொலர்கள் வெகுமதி வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணய கைதியை எங்களிடம் ஒப்படைக்கும் நபரின் அடையாளம் பாதுகாக்கப்படும். அந்த நபர் குடும்பத்துடன் காசாவில் இருந்து பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல இஸ்ரேல் அழைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில் நெதன்யாகுவின் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது. அவரின் வருகையின் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது.

அதில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் மற்றும் இராணுவ தளபதியுடன் பாதுகாப்பு கவசம், பாலிஸ்டிக் தலைக்கவசம் சகிதம் காசாவில் நெதன்யாகு சுற்றிபார்த்துள்ளார்.


இந்நிலையில், பணயக்கைதிகளை கண்டுபிடித்து அவர்களை மீட்கும் முயற்சிகள் தொடரும் என்றார். இதற்கிடையில், ஜபாலியாவில் அல்-பலாட் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது. அங்குள்ள ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து நாளுக்கு நாள் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அணு ஆயுதங்களை பயன்படுத்த புட்டின் ஒப்புதல்

உக்ரைன் மீதான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்ய அதிபர் புதின் ஒப்புதல் அளித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கி 1,000 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கையில் புதின் நேற்று கையெழுத்திட்டுள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையில் கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடங்கியது. இந்த போர் தொடங்கி நேற்றோடு 1,000 நாட்கள் நிறைவடைந் துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலால் உக்ரைனில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். நாட்டின் அடிப்படை உள்கட்டமைப்பு தகர்ந்துள்ளது.



இதனிடையே, ரஷ்யா மீது தாக் குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் ராணுவ உதவி வழங்கி வந்தன. நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக் கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது. எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.



# ஒரேயொரு சதம் சச்சினை முந்த தயாராகும் கோலி

அஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் வாஸ்கர் கிண்ணத்திற்கான ஆயத்தப் பணியில் இந்திய அணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

அணித் தலைவர் ரோகித் சர்மா இல்லாத நிலையில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா அணியை வழிநடத்தவுள்ளார். சில முக்கிய வீரர்கள் காயமடைந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நட்சத்திர வீரர் விராட் கோலி மீது அனைவரின் கவனமும் திரும்பியுள்ளது.

சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட அவமானகரமான தோல்வியில் இருந்து இந்தியா மீண்டு வருவதற்கு பார்டர் கவாஸ்கர் டிராபி ஒரு வாய்ப்பாகும்.

குறைந்தபட்சம் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதி வாய்ப்பை இந்தியா தக்கவைத்துக் கொள்ள முடியும்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரில் அவர் வெறும் 93 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார். இந்நிலையில், இந்த தொடரில் ஒரு சதம் அடித்தால் இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை கோலி முறியடிப்பார். அவுஸ்திரேலிய மண்ணில் ஆறு சதங்களுடன் அதிக டெஸ்ட் சதங்கள் அடித்த இந்திய துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் கோலி ஆகியோர் உள்ளனர்.

இந்த தொடரில் விராட் கோலி மேலும் ஒரு சதம் அடித்தால் சச்சினை முந்தி முதலிடம் பிடிக்க முடியும். நான்கு சதங்கள் அடித்தால், அவுஸ்திரேலிய மண்ணில் 10 சதங்கள் அடித்த முதல் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை கோலி பெறுவார்.

மேலும், கோஹ்லிக்கு மற்றொரு மைல்கல் காத்திருக்கிறது. அவுஸ்திரேலியாவில் வெவ்வேறு வடிவங்களில் 11 சதங்கள் உட்பட 3426 ஓட்டங்களை கோலி குவித்துள்ளார். இன்னும் 74 ஓட்டங்கள் எடுத்தால் அவர் 3,500 ஓட்டங்களை பெறுவார். மேலும் 74 ஓட்டங்கள் எடுத்தால் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் மற்றும் சர் விவியன் ரிச்சர்ட்ஸ் ஆகியோருக்குப் பிறகு 3,500 ஓட்டங்கள் எடுத்த மூன்றாவது வீரர் என்ற பெருமையை கோலி பெறுவார்.




# ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி அட்டவணை வெளியீட்டில் மேலும் தாமதம்

2025 சம்பியன்ஸ் டிராபி தொடர்பான நிச்சயமற்ற தன்மை தொடரும் நிலையில், போட்டிக்கான அட்டவணையை வெளியிடுவது தாமதமாகலாம் என்று சர்வதேச கிரிக்கெட் நிர்வாக (ஐசிசி) வட்டாரங்கள் புதன்கிழமை (20) ஜியோ செய்திச் சேவையிடம் கூறியுள்ளன.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பிசிபி) போட்டிக்கான ஹைப்ரிட் முறைமைக்கு எதிரான அதன் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது.

இந்நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் நிகழ்வின் அட்டவணை அறிவிக்கப்பட வாய்ப்பில்லை என்றும் ஐசிசி ஆதாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட போட்டி 2025 சம்பியன்ஸ் டிராபி அடுத்த ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதங்களில் பாகிஸ்தானால் நடத்தப்படப்படவுள்ளது.

முன்னணி எட்டு அணியில் இந்த தொடரில் பங்கேற்கின்றன. எனினும், போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும்




அட்டவணை குறித்து இன்னும் அறிவிப்புகள் வெளியாகவில்லை.

இந்நிலையில், இந்திய அணி பாகிஸ்தான் சென்று விளையாடாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு பேரவை (பிசிசிஐ), ஐசிசிக்கு அறிவித்துள்ளமை அத்து போட்டியை நடத்துவது கேள்விக் குறியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாவது போட்டி கைவிடப்பட்டது தொடர் இலங்கை வசமானது




நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது, இறுதியுமான ஒருநாள் போட்டி கடும் மழை காரணமாக முழுமையாகக் கைவிடப்பட்ட நிலையில் ஒருநாள் தொடரை இலங்கை அணி 2-0 என கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று 12 வருடங்களின் பின்னர் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் தொடரை வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை அணி ஐந்து மாற்றங்களை செய்திருந்தது.

அதற்கமைய பத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், அஷித பெர்ணான்டோ ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக நுவணிந்து பெர்ணான்டோ, நிஷ ான் மதுஷ்க, மொஹமட் சிறாஷ் மற்றும் அறிமுக வீரராக சமிந்த விக்ரமசிங்க ஆகியோர் களம் கண்டிருந்தனர்.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. 21 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 112 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது.

தொடர்ந்தும் மழை பெய்தமையால் போட்டி கைவிடப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இதனால் இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என வெற்றி கொண்டு அசத்தியது. இத் தொடரின் நாயகனாக இரண்டு போட்டிளில் 217 ஓட்டங்களை பெற்ற குசல் மெண்டிஸ் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெற்ற டென்னிஸ் ஜாம்பவான் நடால்; கண்ணீருடன் விடைகொடுத்தார்



உலகின் முன்னிலை டென்னிஸ் வீரரான ரஃபேல் நடால் கலங்கிய கண்களுடன் தனது தொழில்முறை விளையாட்டு வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

டேவிஸ் கிண்ண தொடரில் தனது கடைசி போட்டியில் நடால் விளையாடியிருந்தார்.

டென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார். இதன்படி, செவ்வாய்கிழமை 19ஆம் திகதி தனது இறுதிப் போட்டியில் டென்னிஸ் ஜாம்பவான் நடால் விளையாடினார்.

டேவிஸ் கோப்பை இறுதிப் போட்டியில் நெதர்லாந்திற்கு எதிரான காலிறுதிப் போட்டியில் ஸ்பெயினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போது நடால் தனது கடைசி ஒற்றையர் ஆட்டத்தில் விளையாடியிருந்ததுடன், அவர் தோல்வியை சந்தித்திருந்தார்.

22 முறை கிராண்ட்ஸ்லாம் வென்றவரான நடால், நெதர்லாந்தின் போடிக் வான் டி சாண்ட்சுல்ப்பிடம் 6-4 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்திருந்தார்.

ஸ்பெயினுக்கும் நெதர்லாந்திற்கும் இடையிலான கால் இறுதிப் போட்டியின் முதல் ஆட்டத்தில் 6-4, 6-4 என்ற செட் கணக்கில் முன்னிலை வகித்தார்.

ஆனால் அவரது இந்த ஆட்டம் மலகாவில் கூடியிருந்த ஸ்பெயின் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்தது, ஏனெனில் ஸ்பெயினின் அதிர்ச்சிகரமான தோல்வியால் உள்நாட்டுக் ரசிகர்கள் திகைத்துப் போனார்கள். கடைசி ஆட்டத்திற்கு பின்னர் ஆயிரக்கணக்கான ரசிகர்களின் முன்னிலையில் உணர்ச்சி பெருக்கோடும், கலங்கிய கண்களுடனும் நடால் உரையாற்றினார்.

"நான் வென்ற பட்டங்கள் எல்லாம் எண்ணிக்கையில் உள்ளன, எனவே மக்கள் அதை அறிந்திருக்கலாம், ஆனால் நான் அதிகம் நினைவில் கொள்ள விரும்புவது மல்லோர்காவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்த ஒரு நல்ல மனிதனாக இருப்பது தான்" என்று நடால் கூறினார்.

"எனக்கு அதிர்ஷ்டம் கிடைத்தது. நான் மிகச் சிறிய குழந்தையாக இருந்தபோது எனது கிராமத்தில் டென்னிஸ் பயிற்சியாளராக இருந்த என் மாமா, ஒவ்வொரு நொடியிலும் என்னை ஆதரிக்கும் ஒரு சின்ன குடும்பம்.

இதேவேளை நடாலின் ஓய்வு குறித்து கருத்து தெரிவித்திருந்த முன்னாள் ஜாம்பவான் ரோஜர் பெடரர் , "உங்களுடன் விளையாடுவது மிகவும் பாக்கியம், குறிப்பாக உங்களுக்கு எதிராக" என்று கூறினார். மேலும் "மிகவும் நம்பமுடியாத வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள்." என்றார்.

# ஏமன் அணிக்கு எதிராக போராடி தோற்றது இலங்கை அணி

(அரபாத் பஹுர்தீன்)

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது கால்பந்து போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஏமன் அணி வெற்றி பெற இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என சமன் பெற்றது.

உலக நட்புறவு உதைப்பந்தாட்ட தொடரின் அங்கமாக இடம்பெற்ற இலங்கை உதைப்பந்தாட்ட அணிக்கும், ஏமன் அணிக்கும் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இலங்கை வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரண்டாவதும் இறுதியுமான போட்டி கட்டார் டோஹாவிலுள்ள அல் கோர் மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டி இலங்கை நேரப்படி இரவு 9.45 மணிக்கு ஆரம்பித்தது.

முதல் பாதி ஆட்டத்தில் ஏமன் அணி வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. இதனால் போட்டியில் 21வது நிமிடத்தில் ஹம்ஸா தனக்குக் கிடைத்த இலகு கோலுக்கான வாய்ப்பை பயன்படுத்தி முதல் கோலை அடித்ததுடன் 1-0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றனர்.

பின்னர் தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் பதில் கோல் அடிப்பதற்கான முயற்சியில் இலங்கை வீரர்கள் தீவிரம் காட்டினர். இருப்பினும் ஏமன் தடுப்பு வீரர்களைக் கடந்து அவர்களால் கோல்




அடிக்கமுடியவில்லை.

இருப்பினும், போட்டி முடிவின் மேலதீக நிமிடமான 95வது நிமிடத்தில் வைத்து அல் நஸர் ஏமன் அணிக்கான இரண்டாவது கோலை அடிக்க 2-0 என்ற கோல்கள் அடிப்படையில் ஏமன் அணி வெற்றி பெற்றது.

இதனால் இரண்டு போட்டிகள் கொண்ட தொடர் 1- 1 என சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் சாதனை




கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கம் நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சேர் ஜோன் ரபட் கனிஷ்ட மெய்வல்லுனர் சாம்பியன்ஷிப்-2024 போட்டிகள் கடந்த மூன்று நாட்களாக மாத்தறை கொடவில விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் இரண்டாம் நாள் போட்டிகளின் போது,அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை சார்பாக 12 வயதுப்பிரிவைச் சேர்ந்த மொஹமட் ஹரிஸ் மொஹமட் ஹின்சன் 80 மீ ஓட்டப்பந்தயம் நிகழ்ச்சியில் 11.00 ளுநஉ வினாடியில் ஓடி முடித்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றார். இவரை பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஆகியோர்களுக்கும் மற்றும் மாணவனை அழைத்துச் சென்று வழிநடாத்தும் உடற்கல்வி ஆசிரியர் உள்ளிட்டவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 21ஆம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.